# பாலைதீவுக் கடலில் 70 பேர் பலி; 45 சடலம்

# கிடைத்தன


Regiestred as a News Papar in Ceylon விலைசதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண். 49
போன்: 389

மலர் 12
இதழ்: 19
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மாசி 18 ஜுல்ஹஜ் 22 ஞாயிற்றுக்கிழமை [1-3-70]





## உயிரோடு சென்றோர் பிணமாக வந்த பரிதாபம்

## படகு கவிழ்ந்ததால் ஏற்பட்ட விளைவு

—நமது சிறப்பு நிருபர்கள்—

**பாலைதீவுக்குச் சென்ற யாத்திரிகர் படகு கவிழ்ந்ததில் மாண்டவர் தொகை 70 பேருக்கும் அதிகமாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.**

நேற்றிரவு 10 மணி வரை கிடைத்த தகவலின்படி விபத்தில் மாண்டவர்களின் 45 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. 42சடலங்கள் அடையாளம் காணப்பட்டுவிட்டன. அடையாளம் காணப்பட்ட சடலங்கள் யாவும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பிரேதச் சாலையில் மரணவிசாரணைஅதிகாரி திரு. எஸ்.தனகரத்தினத்தினால்விசாரணை செய்யப்பட்டபின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இரண்டு குழந்தைகளினதும் ஒரு நடுத்தர வயதுடையவரினதும் சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

# மகாவலி திசைதிருப்பும்வேலை பிரதமர் தொடக்கி வைத்தார்

## வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில் சந்தேகம்

கண்டி, சனி

மகாவலிகங்கையைத் திசைதிருப்பும் வேலைகளை பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று காலை பொல்கொல்லையில் ஆரம்பித்து வைத்தார்

கோலாகலமாக நடந்த இந்த வைபவத்தில் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுத்தூதுவர்கள், அமைச்சர்கள், விவசாய மன்னர்கள், மதகுருமார்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்

கண்டி தலதா மாளிகையில் நடந்த வழிபாட்டில் பிரதமரும் காணி,விவசாய, சுகாதார அமைச்சர்கள் கலந்துகொண்டபின் பிரதமர் பொல்கொல்லைக்குவந்து சேர்ந்தார். பின்னர் அங்கு நடந்த வைபவத்தில் அவர் கங்கையை திசைத் திருப்பும் வேலையை ஆரம்பித்து வைத்தார்.

இந்த வைபவத்தில் கண்டி எம்.பியும் சுகாதார அமைச்சருமான திரு.ஈ.எல். சேனநாயகாவரவேற்புரைநிகழ்த்தினார்.

இந்த வைபவத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா உரைநிகழ்த்துகையில் மகாவலிகங்கையைத் திசைதிருப்புவதால் ஏற்படக்கூடிய நன்மைகளை விரிவாக எடுத்துரைத்தார். பலலட்சக்கணக்கான ஏக்கர் புதிதாக நெற்செய்கைக்குள்ளாகுமென்றும் அவர் சொன்னார். மகாவலிகங்கையைத் திசை திருப்பும்வேலைகளில் ஈடுபடுவதற்குப் போதிய ஆடகள் கிடைக்கமாட்டார்களேயென்பதுதான் தமது கவலையென்றும் பிரதமர் தெரிவித்தார்.

## தப்பியவர்கள் விபரம்

பாலைதீவு சென்றிருந்த நமது நிருபர் ஏ. தேவராசா தெரிவிப்பதாவது:

விஸ்வலிங்கம் இராசலிங்கம், 3-ம் வட்டாரம் அல்லைப்பிட்டி; அன்ரனிப்பிள்ளை மாணிக்கராசா, சென், மேரிஸ் ரோட் நாவாந்துறை வடக்கு; தனுஷ்கோடி குமாரசுவாமி 48/5 பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம்; அதிரியாம்பிள்ளை தாசியஸ், சென். மேரிஸ் ரோட் நாவாந்துறை வடக்கு; அந்தோனிப்பிள்ளை பாக்கியராசா, மாரிசன்கூடல் இளவாலை; துரைராசா பாலசுப்பி[illegible]ணியம், மத்திய பாடசாலையடி வேலணை கிழக்கு; சின்னத்துரை சந்திரசேகரன், 1-ம் வட்டாரம் வேலணை; முரு[illegible] வேலணை கிழக்[illegible] [illegible] தியாகராசா 1-ம் குறு[illegible] [illegible]தரு. கொழும்புத் 16) மண்கும்பான். கருணாகரன் இராஜரத்தினம், நல்லூர் கோவில் வீதியைச்சேர்ந்த ஜோசப் இரத்தினசிங்கம், ரப்பியல் மரியதாஸ், கந்தையா சிவசுப்பிரமணியம், ஜெகதீஸ்வரி பாலசுப்பிரமணியம் (7 வயது), நாகேஸ்வரி கணேஷ், சுமதி கணேஷ் (2 வயது), பூநகரியைச் சேர்ந்த தர்மலிங்கம்.

வேலணையைச் சேர்ந்த உறவினர்கள் 12 பேர் இதே வள்ளத்தில் சென்றதாகவும், அவர்களில் மூவரைத் தவிர ஏனையோர் கடலுக்கு பலியானதாகவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாண மார்[illegible]டன் ரோட்டைச்சேர்ந்த திருமதி பிலோமினாதம்பி என்பவரின் 3 [illegible] தம்பியின் தம்பியாரும் இதே படகில் சென்று பலியானினர் இவர்களில் தாயின[illegible] 3

## படகுக்காரன் மகன் மரணம்; படகோட்டி கைதானர்

பாலைதீவு அந்தோனியார் திருநாளில் கலந்துகொள்வதற்காகச் சென்ற யாத்ரிகர் கோஷ்டியொன்றை சென்ற வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் குருநகர்த் துறையிலிருந்துபாலைதீவுக்கு ஏற்றிச் சென்ற படகொன்று விபத்துக்குள்ளானதில் தான் தலைமையில் பொலிஸ்கோஷ்டியொன்றும் கடமையாற்றிக்கொண்டிருந்தது. வெள்ளிக்கிழமை இரவு 9-30 மணியளவில் பாலைதீவுக் கடலுக்குச் சமீபத்தில் படகொன்று விபத்துக்குளளானதாகத்தகவல் கிடைத்ததும் பொலிஸ் கோஷ்டியுடன் [illegible]

மாலைதீவுககுச் சென்ற தங்கள உற்றார் உறவினர் பிணமாக வந்து சேர்ந்ததை குருநகர்இறங்குதுறையில் நின்று கதறியழுது கண்ணீர்விட்ட காட்சிகல் நெஞ்சககாரர்களையும் கலங்கவைககக கூடியதாகஇருந்தது. யாழ்ப்பாணமே நேற்று சோகத்தி[illegible]

# படகு விபத்து எப்படி நடந்தது?

# தப்பியவர்கள் தரும் தகவல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... கண்டி தலதா மாளிகை இந்த வைபவத்தில் பிரதமர் தெரிவித்தார்.

# படகு விபத்து எப்படி நடந்தது? தப்பியவர்கள் தரும் தகவல்

பேரலைகளினாலும் கடுமையான காற்றினாலும் அரைமணி நேரத்துக்கு அலைகளினால் ஊசலாடிய படகு அமிழ்ந்து பலர் மரணமான படகு விபத்து யாழ்ப்பாணத்தையே சோகத்துக்குள்ளாக்கியது. விபத்திற் சிக்கிய படகிலிருந்து முதலில் தப்பிச் சென்று கரையடைந்த நாவாந்துறையைச்சேர்ந்த வாலிபர் மூவர் படகு விபத்துப்பற்றி மிகுந்த துயரத்துடன் சொல்லினர்.

விபத்துக்குள்ளான யாத்திரிகர் படகில் தப்பிய 10 பேர்களுள் நாவாந்துறையைச் சேர்ந்த அடைக்கலம் தாஸியஸ் (வயது 24) அந்தோனிப்பிள்ளை மாணிக்கராஜா (வயது 21) செல்வரத்தினம் சந்திரன் (வயது 17) ஆகிய மூவராவர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 6-15 மணிக்கு குருநகர்த்துறையிலிருந்து நாம் ஏறிய படகு புறப்படத்தயாரானது. சுமார் 100 பேர் வரை படகில் ஏறிய காரணத்தால் அஞ்சிய படகோட்டி பக்கத்திலுள்ள மறுபடகில் சிலரை ஏறும்படி கேட்டுக்கொண்டார். இதனால் படகில் ஏறியவருள் 25 பேர்களவரை மறுபடகுக்கு மாறிவிட்டனர்.

கடுமையான இருளை கிழித்துக்கொண்டு படகு நிதானமாக கடலில் சென்றுகொண்டிருந்தது. சுமார் மூன்று மைல்களவரை நிதானமாகச் சென்றபடகு கடற்காற்றினாலும், பாரிய அலைகளினாலும் குலுங்கத் தொடங்கியது. அப்போது படகிலிருந்த எங்கள் கண்களுக்கு முன்னே பாலைதீவுக் கோவில் தீபங்கள் சாடையாகத் தெரியத் தொடங்கின. நாம் அனைவரும் கோவிலை நெருங்கிவிட்டோம் என்ற நம்பிக்கையோடிருந்தோம். காற்றினதும் பலமானதாக்கமும், அலைகளின் கொந்தளிப்பும் படகை நிதானமிழக்கச்செய்தது. நெளிந்து சரிந்த படகினுள்ளே தண்ணீர் ஏறத்தொடங்கவே படகு சிறுகச்சிறுகத் தளம்பத் தொடங்கியது. படகு நிலை தளம்பி அரைமணிநேரமாகிவிட்டது. பிரயாணிகள் அனைவரும் கதறத்தொடங்கினர். எங்களுக்கும் அச்சம் ஏற்பட்டது. ஆபத்தான நிலைக்குள்ளாகிவிட்டோமென்பதைப் புரிந்துகொண்டோம். படகின் கூரைமீதிருந்தமையால் படகு ஆழத்தொடங்கியதும் கடலில் பாய்ந்துவிட்டோம். 2மைலுக்கு விரித்துகிடக்கும் கடலில் நீந்தத் தொடங்கினோம். கோவில் திசையை நோக்கி வீசும்காற்று நீந்துவதற்குச் சாதகமாக இருந்தது. எங்களுக்கண்மையில் நீந்த முடியாது தத்தளித்துக் கொண்டிருந்த குருசாமி என்பவரை நம்முள் ஒருவரான மாணிக்கராஜா தன் ஒரு கையைக்கொடுத்து பௌத்திரமாக நீந்திச் சென்று அவரையும் காப்பாற்றினார்.

இந்த இரு மைலுக்கும் ஜீவமரணப் போராட்டம் நடத்தியே நாம் கரையேறினோம். ஆழந்தெரியாத காரணத்தினால் கரை அண்மிக்கும்வரையில், அதாவது நடந்துசெல்லக்கூடியஎட்டுந் தண்ணீரிலும் நீந்திச்சேர்ந்தே கரையேறினோம்.

## கரையை அடைந்த நாங்களே தகவல் தெரிவித்தோம்

நாம் கரையேற்றியபோது பாலைதீவுக்கரையில் இருந்த ஒருவருக்குமே படகு விபத்துக்குள்ளானது பற்றி தெரியவில்லை. பல யாத்திரீகர்கள் அவ்வேளை உறங்கிவிட்டனர்.

கரையை அடைந்த சோர்வு நிலையில் முதலில் ஆலயக் குருவானவரிடம் சென்று முதலில் செய்தியைத் தெரிவித்தோம். அவர் எம்மை ஆசுவாசப் படுத்தியபின்னர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு நாம் தகவலைத்தெரிவித்தோம் அவ்வேளை அங்குநின்ற யாழ். நகரமேயர் திரு. துரைராஜாவும், எங்கள் வட்டாரப் பிரதிநிதி திரு. ஜோசப் வீரசிங்கமும் செய்தி அறிந்து எம்மை வந்து சந்தித்தனர். எங்களுடைகளை மாற்றுவதற்கு வேறு உடைகள் தருவித்துத்தந்தனர்.

### பண்ணிசை நூல்

கோப்பாய், சனி

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் பஜனைச்சபையாரால் பண்ணிசை நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதனையொட்டி நடைபெற்ற விழாவில் காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன வித்வான் திரு பி ஏ எஸ். இராசசேகரனின் பண்ணிசைக் கச்சேரியும் இடம் பெற்றன.

... சாலையடி வேலணை கிழக்கு; சின்னத்துரை சந்திரசேகரன், 1-ம் வட்டாரம் வேலணை; முருகேசு சிவராசா வேலணை கிழக்கு; செல்வத்துரை தியாகராசா 1-ம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை; பிரான்சிஸ் சேவியர் பனங்கட்டிக் கொட்டில், மன்னார்.

### கரையில் அடைந்தன

இன்று காலை மீட்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது 7 சடலங்கள் பாலைதீவுக் கரையில் அடைந்துகிடக்கக் காணப்பட்டன. மிகுதி 38 சடலங்கள் கடற்படையினரின் உதவியுடன் கடலிலிருந்து மீட்கப்பட்டன.

### பாலைதீவில் அடையாளம் காணப்பட்ட சடலங்கள்

கோயிலுக்குச் சென்ற உறவினர்கள்விபத்துப்பற்றிக் கேள்விப்பட்டதும்பாலைதீவுக்கு தேடிச் சென்றவர்கள் பாலைதீவில் வைத்து மாண்டவர்களிற் சிலரை அடையாளம் காட்டினர். அங்கு அடையாளம் காட்டப்பட்டவர்களின் விபரம் வருமாறு:

விஜயரட்னசிங்கம் (வயது 11) பெரியவிளான் (இவரின் குடும்பத்தைச் சேர்ந்த இன்னும் 7 பேர் விபத்து நடந்த வள்ளத்தில் சென்றதாகவும் கூறப்படுகிறது); சுப்பையா தர்மலிங்கம் (வயது 40) பூநகரி; நாகநாதி செல்லையா (வயது 55) வேலணை; சதாசிவம் வேலழகன் (14 வயது) இவரும் படகில் சென்றதாக கூறப்படுகிறது. சடலம் மீட்கப்படவில்லை) வேலணையைச் சேர்ந்த செல்லையா இராதாகிருஷ்ணன் (வயது ... யாழ்ப்பாண மாரி...டன் றேட்டைச் சேர்ந்த திருமதி பிலோமினாதம்பி என்பவரின் 3 பிள்ளைகளும், பிலோமினா தம்பியின் தம்பியாரும் இதே படகில் சென்று பலியா...னர் இவர்களில் தாயின... 3 பிள்ளைகளினதும் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### விபத்து பற்றிய முதல் தகவல்

இரவு 8-15 மணியளவில் நடைபெற்றதாகக் கூறப்படும் இக்கோரபடகுவிபத்து சம்பந்தமாக பாலைதீவுக் கரையில் நின்றவர்களுக்கு விபத்தில் தப்பிச்சென்ற நாவாந்துறையைச் சேர்ந்த அ. தாசியஸ் என்பவர் கூறியதாகவும் இதைத் தொடர்ந்து இதுபற்றிய தகவல் கோவில் குருவானவர் வண: ஹென்றி மொறேவுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. ஆராதனையில் ஈடுபட்டிருந்த பக்தர்களுக்கு ஒலிபெருக்கி மூலம் இத்தகவல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பத்துக்கும் மேற்பட்ட வள்ளங்கள் விபத்து நடந்த இடத்துக்கு விரைந்துசென்றன ஆயினும் விபத்துநடந்த இடத்தைக குறிப்பாக கண்டுகொள்ள முடியாததால் எவரையும் காப்பாற்றவோ, மீட்கவோ முடியாமல் போய்விட்டதாகவும் கூறப்படுகிறது. பின்னர் பாலைதீவில் முகாமிட்டிருக்கும் பொலிசார் யாழ். பொலிஸ் அதிபருடன் தொடர்புகொண்டு, மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். முதல் முதலாக கண்டுபிடிக்கப்பட்ட 14 சடலங்களும் கடற்படையினரின் படகுகள் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு, யாழ். பெரியாஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டன.

(4-ம்பக்கம் பார்க்க)

... தற்காகச் சென்ற யாத்திரிகர் கோஷ்டியொன்றை சென்ற வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் குருநகர்த் துறையிலிருந்துபாலைதீவுக்கு ஏற்றிச் சென்ற படகொன்று விபத்துக்குள்ளானதில் தான் எழுபதுக்கு மேற்பட்டோர் மாண்டனர். விபத்தில் 'சிக்கிய படகின் சொந்தக்காரரன்ன வெல்லம் என்பவரின் மகனான 18வயது டியூக்வெல்லமும் இவ்விபத்தில் மாண்டார். இந்தவள்ளத்தின்கண்டக்டர் அருளப்பு சந்தியாப்பிள்ளையும் அவரது உதவியாளர் டியூக்கும் பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்

பாலைதீவுத் திருநாளில் கலந்து கொளவதற்காக சென்ற இரண்டு தினங்களிலும் ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் பாலைதீவில் குழுமியிருந்தனர். அங்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஸி. ஜயசூரியா ... நிக்கொண்டிருந்தது. வெளளிக்கிழமை இரவு 9-30 மணியளவில் பாலைதீவுக் கடலுக்குச் சமீபத்தில் படகொன்று விபத்துக்குள்ளானதாகத்தகவல் கிடைத்ததும்பொலிஸ் கோஷ்டியுடன் இன்ஸ்பெக்டர் ஜயசூரியா சென்றுதேடுதல் நடத்தியும் நேற்றுக் காலை 6-30மணிக்குத்தான் ஒரு சடலத்தைககண்டெடுகக கூடியதாயிருந்ததாம், வெளளிககிழமை பிற்பகல் பயணம் சொல்லிவிட்டு ... மாக வந்து சேர்ந்ததை குருநகர்இறங்குதுறையில் நின்று கதறியழுது கண்ணீர்விட்ட காட்சிகல் நெஞ்சககாரர்களையும் கலங்கவைககக கூடியதாகஇருந்தது. யாழ்ப்பாணமே நேற்று சோகத்திலாழ்ந்திருந்தது. இலங்கையின் சமீப காலச் சரித்திரத்திலேயே கடற்பிரயாணத்தில் இப்படியொரு பெருவிபத்து நிகழ்ந்ததில்லையென்று கூறப்படுகிறது.

### குழந்தையை அணைத்தபடி தாய்

படகு விபத்தில் சிக்கி மாண்டவர்களின் சடலங்கள குருநகர்த்துறைக்கு கொண்டுவரப் பட்டபோது ஒரு தாய் தன் இரண்டு வயதுக குழந்தையை அணைத்தபடி உயிரற்று கிடந்தகாட்சி எல்லோரையும் கண்கலங்க வைத்தது. இரண்டு குழந்தைகள அழகாக உடையணிந்து சப்பாத்து கால்மேஸுடன் உயிரற்ற நிலையில் கிடந்தபோதும் பால்வடியும் முகத்தைப் பார்த்தவர்கள கண்ணீர் சொரிந்தனர்.

**பாலைதீவுக்குச் சென்றவர்களின் உறவினர்கள் ஏக்கமே உருவாக இறங்கு துறையில் நின்றுகொண்டிருந்தனர். சிலர் வாய்விட்டுக் கதறியழுதனர். சடலங்கள் வந்ததும் அடையாளம் கண்டுகொண்ட அவர்கள் தலையிலடித்துக் கதறிய காட்சி காண முடியாததாக இருந்தது.**

### படகில் சென்றவர் தொகை

யாழ்ப்பாண நகரிலிருந்து ஏழு மைல் தொலைவில் பாலைதீவு இருக்கிறது. அங்குள்ள அந்தோனியார் கோவிலில் ஆண்டுதோறும் திருநாள் நடைபெறுவது வழக்கம். இத்திருநாளில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரிகர் செல்வர். சென்ற வருடங்களை விட இம்முறை பாலைதீவு திருநாள் ஒரு நாள் முன்னதாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் பகலே யாத்திரிகர் பலர் பாலைதீவுக்குப் போய்ச் சேர்ந்தனர். நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் இறங்குதுறையிலிருந்து விபத்துக்குள்ளான துரதிர்ஷ்டமான அந்த வெள்ளம் பாலைதீவுக்குப் புறப்பட்டுச் சென்றது. இந்த வள்ளத்தில் நிறையப் பிரயாணிகள் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் வள்ளத்தில் மொத்தம் எத்தனை பேர் சென்றார்களென்பது சரியாகத் தெரியாது. இந்த வள்ளம் சுமார் 9 மணியளவில் பாலைதீவுக்கு சிறிது தூரத்தில் அதாவது சுமார் இரண்டு மைல் தூரத்தில் சென்றுகொண்டிருந்தபோது திடீரெனக் கவிழ்ந்ததாம். வள்ளத்தில் இருந்த ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் வள்ளம் கவிழும்பொழுது கூச்சலிட்டதாகவும் ஆனாலும் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் வள்ளம்கவிழ்ந்ததாகவும் கூறப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியில்

### அடையாளம் காட்டப்பட்ட 42 பேர் விபரம்

பாலைதீவு கோயிலுக்குச் சென்று இதுவரை திரும்பாதவர்கள் இருந்தால் அவர்களைப் பற்றிய தகவல்களை யாழ் பொலிசாருக்கு அறிவிக்கும்படி பொலிசார் கேட்டுக் கொண்டனர். உறவினர்களை காணாத பல உறவினர்கள் சோகமே உருவாக பெரியாஸ்பத்திரி சவச்சாலை வாயிலில் காணப்பட்டனர்.

சின்னத்துரை கனகரத்தினம் (45), கனகரத்தினம் பண்டாரம் (40), சின்னத்துரை சுமதி (2), கணேஸ் நாகேஸ்வரி (22) நல்லூர், பாலசுப்பிரமணியம் ஜகதீஸ்வரி (7) கொட்டடி, கந்தையா சிவசுப்பிரமணியம் (23) பண்டியந்தாழ்வு, செல்லையா அந்தோனிப்பிள்ளை (35), கனகராஜா இராஜேஸ்வரன் (22), றவ்லெட் மரியதாஸ் (24), ஞானப்பிரகாசம் தேவசகாயம் (49) இந்திராஜயபதி(10), கந்தையா விஜயசிங்கம் (10), நாகநாதர் செல்லையா (64), சுப்பையா தருமலிங்கம் (50), கனகசபை சின்னத்துரை (45), தம்பிப்பிள்ளை கனகம்மா (42), செல்வரத்தினம் செல்வம் (5), சின்னத்துரை கனகரத்தினம் (42), செல்வரத்தினம் செல்வம் (5), இராஜதுரை பிரேமகுமார் (40), செல்லையா கருணாகரன் (27), ஆறுமுகம் இராஜதுரை (30), சின்னத்துரை அன்னசேகரம் (18), தம்பிஐயா இரத்தினசிங்கம் (21), ரி. சுப்பிரமணியம் (28), சுப்பிரமணியம் கந்தசாமி (22), மனுவேற்பிள்ளை பிரான்சிஸ் (12), கிறிஸ்ரோ ஜோசப் (21), வெல்லம் டியூக் (18, வள்ளக்காரரின் மகன்), வேலுப்பிள்ளை கண்ணராசா (வயது 22), செல்வ

(4ம்பககம் பார்கக)

(நேற்று வெளிவந்தவிசேஷ ஈழநாடு பதிப்பில் இச் செய்தி சம்பந்தமாக தகவல்கள் சில வெளிவந்தன)


வந்துவிட்டன! வந்துவிட்டன!!

நீடித்து உழைக்கும் — உத்தரவாதமுள்ள

டோயோ டயர்கள் (TOYO TYRE) 5·25×16 விலை ஒன்று ரூ. 100

உங்கள் தேவைகளை பூர்த்திசெய்துகொள்ள எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.

விஷ்ணு ஹாட் வெயர் ஸ்ரோஸ்

57, யாழ்ப்பாணம் வீதி, (போன்: 34) வல்வெட்டித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

ஸ்ரான்லி ரேட், துரைராஜா கட்டிடத்தில் யாழ். மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸுக்கு மேலுள்ள 2-ம், 3-ம், மாடிகள் வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் உண்டு. விபரங்களுக்கு: யாழ். மோட்டோஸ் ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். 1888

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 22 ஸ்ரீ 9000 தொடர்பிலக்கமுள்ள Fordson Dextra டிராக்டர் விற்பனைக்குண்டு. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1657

2. A 40 — கார் என்ஜின் மற்றும் உதிரிப் பாகங்களும் நல்ல நிலைமையில் விற்பனைக்கு உள்ளன. விபரங்களுக்கு யாழ்ப்பாணம் சென்றல் மோட்டோஸ், 98.B, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1890

றம்கள்:
பாவித்து கழித்த 45 கலன் வெற்று றம்கள் விற்பனைக்குண்டு. வேலை நாட்களில் பார்வையிடலாம். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1889

## பேச்சு கட்டுரைப் போட்டிகள்

உரும்பராய், சனி

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கச் சார்பிலான பேச்சு, கட்டுரை, இசைப் போட்டிகள் இந்த மாதத்தில் கிளைச் சங்க ரீதியில் நடத்தப்படவிருக்கிறது.

மாவட்டப்போட்டி ஏப்ரல் முற்பகுதியில் நடைபெறுமென்றும் குறித்த போட்டிகள் யாவும் சிறப்பாக நடைபெறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைப் பேச்சுப்போட்டி உபசபைச் செயலாளர் திரு வே. சின்னையா துரிதமாக செய்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கோட்டை, சனி

விண்வெளியில் வலம் வந்துகொண்டிருக்கும் செய்மதிகளிலிருந்து தந்தித் தொடர்பு சமிக்ஞைகளைப் பெற்றுக் கொள்ளும் நிலையமொன்று இலங்கையில் நிறுவப்படவுள்ளது.

## தேவை

உடன் நியமனத்திற்கு ஓர் தட்டெழுத்து - கணக்கு லிகிதர் தேவை.

**தராதரம்:** S. S. C. (ஆங்கிலம்) கணக்கு, தமிழ்ப் பாடங்களில் விசேட சித்தியுடன், ஆங்கிலத் தட்டெழுத்தில் நிமிடமொன்றுக்குக் குறைந்தது 30 சொற்கள்; சிறந்த கணக்கியல் அறிவு முக்கியம்.

**வயது:** 25 தொடக்கம் 35 வரை.

**பிணை:** உரொக்கம் ரூபா 1000/- ஆதனம் ரூபா 2000/-

**வேதனம்:** சகல படிகளும் உட்பட மாதமொன்றிற்கு ரூபா 175/-

காரியாலய நடைமுறைகளிலும் வர்த்தகக் கடிதத் தொடர்புகளிலும், அனுபவமுள்ளவருக்கு விசேட சலுகை உண்டு.

அண்மையில் பெற்ற இரு நற்குண சான்றிதழ்களுடன் 16-3-70க்கு முன் தலைவர், வடமாகாணம் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 25, முன் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1967

## நன்றிநவிலல்

C. தியாகராசா

திரு. V. வாமதேவனும் பாரியாரும், திரு. T. ஸ்ரீ இராமநாதனும் பாரியாரும், திரு. C. நடேசனும் பாரியாரும் மற்றும் அக்குடும்பத்தினரும், காலம் சென்ற சமூகஜோதி கேற்முதலியார் C. தியாகராசா அவர்கள் சுகவீனமுற்று இருந்தபோது அன்பு ஆதரவு காட்டியவர்களுக்கும், அன்னாரது மரணச்சடங்கில் பங்கு பற்றியும் மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் அவர்களது துயரத்தில் பங்குபற்றிய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றனர், தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு மிக வருந்துகின்றனர்.

அயோத்தியா,
14, ப்ளவர் ரெறஸ்,
1969 கொழும்பு 3

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 230 A நாவலர் வீதி திரு. தில்லையம்பலம் நவரெத்தினம் அவர்களிடம் 1-4-68க்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 19-3-70 முற்பகல் 9-30 மணி தொடக்கம் அதே இடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளர். 1963

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 1—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 கர்னாடக இசை, 7-45 செய்திச்சுருள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.

## பயிற்சி பெற்றுத் திரும்பினார்

சுழிபுரம், சனி

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் சோ. சற்குணராசா ஐந்து ஆண்டுகள் இங்கிலாந்தில் விசேஷ பயிற்சிபெற்ற பின் இங்கு திரும்பியுள்ளார்.

## கோப்பாய்வட்டாரபாடசாலைகள் உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

உரும்பராய், சனி

கோப்பாய்வட்டார பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப்போட்டி கோப்பாய் கிறிஸ்தவகல்லூரியில் நடைபெற்றது. 'பி' பிரிவில் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை முதலாம் இடம் ஐந்தைப் பெற்றது.

மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை கோப்பாய்வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே சண்முகநாதனும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் திரு. ஈ. கே. சண்முகநாதனும் ஏற்றுக்கொண்டனர்.

'பி' பிரிவுப் போட்டி முடிவுகள் வருமாறு:

13 வயதுக்குட்பட்டோர். [ஆண்கள்] உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை. 16 வயதுக்குட்பட்டோர்: [ஆண்கள்] உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை, கோப்பாய் சரவணபவானந்தவித்தியாசாலை, 19 வயதுக்குட்பட்டோர்: [ஆண்கள்] உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை. 13 வயதுக்குட்பட்டோர்: [பெண்கள்] உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை, கோப்பாய் சரவணபவானந்தவித்தியாசாலை. 16வயதுக்குட்பட்டோர் [பெண்கள்] உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை. 19 வயதுக்குட்பட்டோர் [பெண்கள்] கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை

'ஏ' பிரிவு பெண்கள்: 13 வயதுக்குட்பட்டோர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி 16 வயதுக்குட்பட்டோர்: உரும்பராய் இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

'ஏ' பிரிவு ஆண்கள்: 13 வயதுக்குட்பட்டோர்: நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, அச்சுவேலி கிறிஸ்தவக்கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி. 16 வயதுக்குட்பட்டோர்: உரும்பராய் இந்துக்கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி 19 வயதுக்குட்பட்டோர்: வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்,

குறித்த தேகப்பயிற்சி திறம்பட நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை உடற்பயிற்சிக் கல்வி அதிகாரி திருமதி குகதாசன் மேற்கொண்டிருந்தார். போட்டியில் முதலிடம்பெற்ற பாடசாலைகளே மாவட்டப் போட்டியில் பங்குபற்றத் தகுதியுடையன.

உடற்பயிற்சி பெரும்பாக வித்தியாதிகாரி திரு ஆர். சீவரத்தினம் உடற்பயிற்சியின் அவசியம்பற்றி உரை நிகழ்த்தினார்.

## திருமலை இந்துக்கல்லூரி முப்பெரியார் போட்டி முடிவுகள்

திருக்கோணமலை, வெள்ளி

திருமலை இந்துக்கல்லூரி முப்பெரியார்விழாவை முன்னிட்டு நடத்திய பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டியில் வெற்றியீட்டியவர்கள் விபரம் வருமாறு:-

தமிழ்க்கட்டுரைப்போட்டி 7-ம் வகுப்பு:

பொ. பொன்னுத்துரை, பா. வாசுதேவன், சு. கனகசுந்தரம். 8-ம் வகுப்பு: கி முரளீதரன் மஃறூப், உதுமானசா. 9-ம் வகுப்பு: எம். செல்வகுமார், இ. பாஸ்கரமூர்த்தி. 10-ம் வகுப்பு: எஸ். அமிர்தலிங்கம், எஸ். பாலச்சந்திரன், த. உதயசங்கர். 11-ம், 12-ம் வகுப்பு: ச ஞானசேகரம், க நடேசபிள்ளை, இ. தருமராசா.

ஆங்கிலப் பேச்சுப் போட்டி:

8-ம் வகுப்பு: சு. சந்திரகுமார், ந. நிரஞ்சன், தி...

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஞாயிறு

குரும்பசிட்டி உதயதாரகை இளைஞர் கழகத்தினரும் ஊரங்குணை விவேகானந்தா விளையாட்டுக்கழகமும் கலந்து கொண்ட சிநேகபூர்வமானமென்பந்துக்கிரிக்கெட் போட்டியில் குரும்பசிட்டிக் கோஷ்டி 7 விக்கெட்டுக்களால் தோல்வியுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய குரும்பசிட்டிக் கோஷ்டியினர் தமது முதலாம் இரண்டாம் இன்னிஸ்ங்களில்முறையே எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 89, 30 ஓட்டங்களைப் பெற்றனர். ஊரங்குணைக்கோஷ்டி தமது முதல இன்னிஸ்ஸில் 49 ஓட்டங்களையும் இரண்டாம் இன்னிஸ்ஸில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 74 ஓட்டங்களையும் பெற்றினர். (மல். நிரு)

பருத்தித்துறை

## நகரம் புதுப்பொலிவு பெறும்

நெல்லியடி, சனி

பருத்தித்துறை நகரத்தைப் புதிய முறையில் திருத்தி அமைப்பதற்கு உள்ளூராட்சி மந்திரி ஆர். பிரேமதாசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்நகரத்தையும் சந்தையையும் புதிய முறையில் திருத்தி அமைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள கட்டிடநிபுணர் ஒருவர் இங்குவந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

உள்ளூராட்சி மந்திரிபருத்தித்துறைக்குமுதல் முதலாக விஜயம் செய்த பொழுது அங்குள்ள பழைய கட்டிடங்களைப் பார்த்துவிட்டு இது சம்பந்தமாகப் புணரமைப்பு நடவடிக்கை மேற்கொள்வதாகப் புதிய நகர சபைத் தலைவர் திரு. வி. தர்மலிங்கத்திற்கு உறுதியளித்தார்.

## 52 பேரில் 28 பேர் சித்தி

மாவிட்டபுரம், சனி

அரசாங்க எழுது வினைஞர் 1-ம் தரத்தினருக்கான விசேஷ பரீட்சையில் தோற்றிய 52 தமிழரில் 28 பேர் சித்தியடைந்தனர்.

தற்போது அரசாங்க எழுது வினைஞர் 1-ம் தரத்தில் இருந்தவர்களை விசேஷ தரத்துக்கு உயர்த்துவதற்கான இப்பரீட்சையில்தோற்றியவர்களுக்குச் சிங்களத் தேர்ச்சி பற்றியபிரச்னை எழுந்ததையடுத்து இப்பரீட்சையில் தோற்றிய ஒருவர் இதுபற்றி தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு அறிவித்திருந்ததாகவும், திரு. செல்வநாயகம் திறைசேரி அதிகாரியுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து சிங்களத்தேர்ச்சிப் பிரச்னை கைவிடப்பட்டதாகவும், இதன்பயனாக மேற்படிபரீட்சையில் தோற்றிய 52 தமிழரில் 28 பேர் சித்தியடைய வாய்ப்பு ஏற்பட்டதாகவும் தெரிகிறது.

... ...

## 'பட்டர்' தட்டுப்பாடு நீங்கும்

கோட்டை, சனி

கடந்த ஆறுமாத காலமாக நாட்டில் நிலவில் 'பட்டர்' தட்டுப்பாட்டை நீக்க 5,000 பட்டர் பெட்டிகள் இரு கப்பலில் வந்து இறங்கியுள்ளன. இவை ஒவ்வொன்றும் 54 இருத்தல் நிறையுள்ளவை.

## இன்றைய பலன்

மாசிமாதம் 18-ம் திகதி [1-3-70]

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்-** கழுகுப்பார்வை உங்களைவட்டமிடும். முகமன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தை முறியடிப்பதற்கு சிலர் முனைவார்கள். அபாயகரமானதொழில்களில் ஈடுபடுவோர் அவதானம் செலுத்தவும்.

**ரிஷபம்-** இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும். இல்லம் பல்கலைக்கழகமாக மாறும். அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். களஸ்திர வழியாலும் கண்ணியம் சேரும்.

**மிதுனம்-** எக்கருமத்தையும் எண்ணி துணிகல், அவசரப்போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக்கூடும். வணிகர்களாயின் அதிகமுதலீட்டை தவிர்த்துக்கொள்ளவும். நிதானம் வேண்டும்.

**கடகம்-** சிந்தனைக் கணைகள் தாக்கும். சீறிவரும் கோபம். உடன்பிறந்த சகோதரத்தின் உடல் நிலையும் கவலையைத்தரும்.

**சிம்மம்-** பொறியியலாளருக்கு பொன்னானதினம். புகழும் பொருளும் குவிவதற்கான சந்தர்ப்பம் உண்டு. பொதுவாகதொழிலில் வெற்றிஉண்டு.

**கன்னி-** எதிர்பார்த்த பொருள்வரவுக்கு இடமுண்டு. பூமியால் லாபம்கிடைக்கும். புத்திரர் வழியாலும்நன்மை உண்டு.

**துலாம்-** குறுக்குவழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக்கூடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிககப்படும்.

**விருச்சிகம்-** வாழ்க்கை புதிர்நிறைந்ததாகவே இருக்கும். எடுத்தகாரியம் இறுதிநிமிடத்தில் ஏமாற்றத்தை அளிக்கும். நல்லதை செய்யினும் வீண்பழிகேட்கநேரிடும். வெளியிடத்துக்கடிதம் வேதனையைத் தரலாம். திடசித்தம் வேண்டும்.

**தனுசு.** இல்லத்தில் இன்று இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். வாக்கு வன்மையின்மூலம் பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு.

**மகரம்-** அவசரப்போக்கினால் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்வீர்கள். எதற்கெடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும். தவறான வழிமூலம் பணம் பாழாகும். முகமன் கூறுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**கும்பம்-** தன்மான மிகுதிக்கும், தன வரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு வாகன சுகமும் கிடைக்கும். குடும்பத்தில் தென்றல் வீசும், உறவினாகள் படையெடுத்து வருவார்கள். கல்வியில் முன்னேற்றம் உண்டு:

**மீனம்-** அறவழியில்நாட்டம் பிறக்கும். தாராளசிந்தை மேலிடும். எதிர்பார்த்த சுபகாரியம் ஒன்றுக்குஇன்று வழிகோலப்படலாம். மதிப்பு உயரும்.

## "தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒரு பகற்கனவு"

— உடுவில் கி. ச. தலைவர்

உடுவில், சனி

"பொதுத் தேர்தலுக்கு முன்னர் தமிழர்களுக்கு ஒருபல்கலைக்கழகம் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால் பொதுத்தேர்தலுக்கு முன் பல்கலைக் கழகம் ஒரு போதும் கிடைக்கப் போவதில்லை. தேர்தலின் பின்பும் கூட தேசிய அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வந்தாலும் பல்கலைக்கழகம் நிச்சயம் கிடைக்கப் போவதில்லை இது ஒரு ஏமாற்றுவித்தை பல்கலைக் கழகத்தை அடிப்ப

தமிழ்ஆராய்ச்சிக் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரைநிகழ்த்திய உடுவில் கிராமசபை அக்கிராசனர் திரு. எஸ். முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினார். சங்குவேலி வெட்டுக் கட்டைப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இவ்வங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

ஆசிரியர் திரு. ரி. தங்கராசா பேசுகையில் இது போன்ற கழகங்கள் கிராமங்கள் தோறும் இளைஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிகளிலிருந்து தந்தித் தொடர்பு சமிக்ஞைகளைப் பெற்றுக் கொள்ளும் நிலையமொன்று இலங்கையில் நிறுவப்படவுள்ளது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

உங்களை மகிழ்விக்க பவனி வருகிறார்கள்
எம். ஜி. ஆர் ஜெயலலிதா
**காதல் வாகனம்**
வின்ஸரில்
தினசரி 4 காட்சிகள்

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
**அடிமைப் பெண்**

வெற்றிகரமான 6வது வாரம்!
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்




**சிவாஜிகணேசன் பத்மினி**
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்






டாக்டர் சோ. சற்குணராசா ஐந்து ஆண்டுகள் இங்கிலாந்தில் விசேஷ பயிற்சிபெற்ற பின் இங்கு திரும்பியுள்ளார்.

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30 மணி
சிவாஜி கணேசன்
நடித்த
**குழந்தைகள் கண்ட குடியரசு**

வல்வெட்டித்துறை
**றஞ்சனா தியேட்டர்**
தினசரி: 6-30, 9-30
நாகேஸ்வரராவ்-வைஜந்தி
நடித்த
**அதிசயப் பெண்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
பிரீ போயா போயா 4காட்சிகள்
ரவிச்சந்திரன்-ராஜஸ்ரீ
நடித்த
**டில்லி மாப்பிள்ளை**

2-வது வாரம்
**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
ஜெமினி-வையந்திமாலா
நடித்த
**வஞ்சிக்கோட்டை வாலிபன்**
(புதிய கொப்பி)
இத்துடன் குடும்பநலத் திட்டம் பற்றிய படம் கலரில் 1-3-70 வரை காண்பிக்கப்படும்.

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya days 10-30 a.m
Yul Brynner
in
DOUBLE MAN
(color)
From 2-3-70
HELGA

**REGAL** JAFFNA
Daily 4-15, 7 & 9-45 p m
Poya, Predoya 4 Shows
Clint Eastwood,
Lee Van Cleef
in
THE GOOD, THE BAD
& THE UGLY
(aduts only)

ஞானசேகரம், க. நடேசபிள்ளை, இ. தருமராசா.

ஆங்கிலப் பேச்சுப் போட்டி:-

8-ம் வகுப்பு: சு. சுந்தரகுமார், ந. நிரஞ்சன், திசாம்பசிவமூர்த்தி. 9-ம் வகுப்பு: பி. ஜெயதேவன், ஞா. தவப்பிரியா, 10-ம் வகுப்பு: இ. இந்திரகுமார், இ. சிவமோகன். 11-ம், 12-ம் வகுப்பு: து. ஜெயசீலன், பி, பாலசிங்கம், என். நவசிவராசாா.

தமிழ்ப் பேச்சுப் போட்டி: க. பொ. த. உயர்தரம்: செ சிவபாதசுந்தரம், வீ. சங்கரலிங்கம், இரா. தருமராச.

10-ம் வகுப்பு: கு. தருமகுலசிங்கம், இ. செல்வகுலராசா, கிருஷ்ணதாஸ். 8-ம் வகுப்பு: சு. இராஜ்குமார், மா. ரவீந்திரகுமார், வ. சிறிஸ்கந்தராசா.

## பருத்தித்துறை கொழும்பு மரதன் ஓட்டம்

உடுப்பிட்டி, சனி

மகாவலிகங்கையை வடபகுதிக்குத் திரும்பும் நோக்கமாக பருத்தித்துறையிலிருந்து கொழும்புவரையுமான மரதன் ஓட்டப் போட்டி கடந்த 25ந் திகதி காலை ஆரம்பமானது

வடமராட்சியிலுள்ள சகல பாடசாலைகளிலிருந்தும் மாணவர்கள் பங்குபற்றினார்கள்

இப்போட்டியை பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினரான திரு கே துரைரத்தினம் பருத்தித்துறைத் தொகுதி காரியாதிகாரி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெர்ணண்டோ, நகரசபை தலைவர் ஆகியோர் ஆரம்பித்துவைத்தனர்

## இவ்வருடம் தமிழ்த்தின விழா போட்டி

உடும்பராய், சனி

'சியவச' விழாவையொட்டி சென்ற ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தின விழாவை இந்த ஆண்டும் தொடர்ந்து நடாத்தும்படி வித்தியாபகுதி பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளது.

இரண்டாம்தவணை ஆரம்பத்தில் வட்டாரப் போட்டிகள் நடைபெறும். அகில இலங்கை நிலைப் போட்டி மட்டக்களப்புப் பிரதேசக் கல்வி அதிபதியின் நிர்வாக ஒழுங்குகளின் கீழ் மட்டக்களப்பில் நடைபெறும் என்றும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

...யும் இரண்டாம் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 74 ஓட்டங்களையும் கைபற்றினர். (மல். நிரு)

## பரஸ்பரம் ஒத்துழைப்பு அவசியம்'

அச்சுவேலி, சனி

'கடமை உள்ளம் படைத்தவர்களாக ஆசிரியர்கள் மிளிரவேண்டும். மாணவர்களையும் அதன்வசப்படுத்த முன்வரவேண்டும்.'

இவ்வாறு அச்சுவேலி ஸ்டேசன் பாடசாலையில் நடைபெற்ற தலைமை ஆசிரியர்கள் அதிபர்கள் அடங்கிய பொதுககூட்டத்துக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி திரு வே சண்முகநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஒரு பாடசாலை முன்னேற வேண்டுமானல் ஆசிரியர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் அவ்வாறே அதிபர்களுடனும் தலைமை ஆசிரியர்களுடனும் ஆசிரியர்கள் நன்கு ஒத்துழைக்க வண்டுமென்றும் இவர்களேபாடசாலைகளில் நல்லெண்ணத்தையும் நற்பண்பாட்டையும் வளர்த்து மாணவர்களை வசப்படுத்த முன்வர வேண்டுமென்றும் சொன்னர். சகல பாடசாலைகளும் வித்தியாதிபதியுடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

பின் தங்கிய பாடசாலைகளுக்கென அரசினரால் வழங்கப்பட்ட இலவச பாடப் புத்தகங்களையும் வித்தியாதிகாரி வழங்கினர். 17 பாடசாலைகள் இப்புத்தகங்களைப் பெற்றுக் கொண்டன,

...மாக நாட்டில் நிலவில் 'பட்டர்' தட்டுப்பாட்டை நீக்க 5,000 பட்டர் பெட்டிகள் இரு கப்பலில் வந்து இறங்கியுள்ளன. இவை ஒவ்வொன்றும் 54 இருத்தல் நிறையுள்ளவை.

துறைமுக ஊழியர் வேலை நிறுத்தம் காரணமாகவே 'பட்டர்' இறக்குமதியில் தாமத மேற்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

8-ம் கலத் தொடர்ச்சி

பண்பாடுகளைக்கை விடவோ கூடாது ' என்றூர்.

தமிழாராய்ச்சிக் கழகம் தமிழ் மொழி பற்றிய ஆராய்ச்சி சொற்பொழிவுகளை நடத்துவது என்றும் தமிழ் இளைஞர்களுக்குத் தமிழில் ஆர்வத்தை ஏற்படச் செய்வதென்றும் ஏனைய கிராம இளைஞர்களையும் இப்பணியில் ஈடுபட செய்ய ஊக்குவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் திருவாளர்கள் நா பதஞ்சலி. எஸ் அரசகுலரத்தினம், வே மயில்வாகனம், டாக்டர் பொன்னுத்துரை, சச்சிதானந்தன், பத்மநாதன் ஆகியோரும் பேசினர். திரு பொன்னம்பலம் நன்றி கூறினர்,

கூட தேசிய அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வந்தாலும் பல்கலைக்கழகம் நிச்சயம் கிடைக்கப் போவதில்லை இது ஒரு ஏமாற்றுவித்தை பல்கலைக் கழகத்தை அடிப்படையாக வைத்து தமிழினத்தைப் பிரிக்கவும் அவர்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்துச் சிதைக்கவுமே அவர்கள் விரும்புகின்றனர் பல்கலைக்கழகம் எமக்கு கிடைப்பது ஒருபகற்கனவாகும்.''

உடுவில் சங்குவேலி இளைஞர்களால் துவக்கப்பட்ட வங்குபாரர்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

ஆசிரியர் திரு. ரி. தங்கராசா பேசுகையில் இது போன்ற கழகங்கள் கிராமங்கள் தோறும் இளைஞர்களால் ஆரம்பிக்கப்படுவது தமிழ் வளர்ச்சிக்கு அவசியம். உத்தியோக ரீதியில் நாம் எமது உடைகளை மொழிகளை மாற்றிக் கொள்ளலாம் ஆனல் அடிப்படை அறிவான நம் தமிழ் மொழியை என்றும் மறக்கவோ, தமிழ் கலாசாரம்

(6-ம் கலம் பார்க்க)

''ராதா''
**சக்தி பூஜா அகர் பத்தி**
★ ஆலயங்கள்
★ திருமண வைபவங்கள்
★ இன்ப நிகழ்ச்சிகளிலும்
உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது
ராதா சக்தி பூஜா
அகர் பத்திகளே!
ஏக விநியோகஸ்தர்கள்:
**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**
53, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

'ஈழநாடு' காரியாலயத்தில்

## விற்பனைக்குள்ள புத்தகங்கள்

| | புத்தகங்கள் [ஆங்கில மொழியில்] | ஆக்கியோன் | விலை |
|---|---|---|---|
| 1 | முதலாவது உலக தமிழ் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைத்தொகுதிகள் I & II — | மகாநாட்டில் கலந்துகொண்ட புகழ்பெற்ற பேர் அறிஞர்கள் | ரூபா 250/- |
| 2. | தற்கால தமிழ் இலக்கியத்தில் பெண் — | ஸ்ரீமதி லோகநாயகி நன்னித்தம்பி | ரூபா 12/- |
| 3 | மகாபலிபுரம் பற்றி விளக்கப்படங்களோடு கூடிய நூற்பட்டியல் — | William Willetts | ரூபா 5/- |
| 4. | திராவிடமொழிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய நூற்படடியல் — | M. Andronov | ரூபா 5/- |
| 5. | தூரதேசங்களில் தமிழ் படிப்பு — | | ரூபா 15/- |
| | ,, ,, ,, — | (கலிகோ பைன்டிங்) | ரூபா 21/- |
| 6. | மகாத்மாகாந்தி வெள்ளேடு (Album படங்களுடன்) — | ராஜேந்திரபிரசாத் முன்னுரையுடன் | ரூபா 10/- |
| 7. | மகாத்மா காந்தியின் செய்திகள் — | மோகன்ராவ் | ரூபா 1/50 |
| 8. | சிறுவர்கள் ராமாயணம் — | M பூதலிங்கம் | ரூபா 2/- |
| 9. | காந்தி கதை (வண்ணப்படங்களுடன்). — | | ரூபா 2/50 |

கையிருப்பில் சொற்ப பிரதிகளே உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெர்லின் பிரச்னை பற்றி ஆலோசிக்க வல்லரசு மாநாடு

## மேற்கு ஜெர்மனியில் நடத்த யு. எஸ். சம்மதம்

நியூயோர்க் பெப், 28 கிழக்கு மேற்கு பெர்லின் பிரச்னைகள்பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவது சம்பந்தமாக சோவியத்யூனியன் தெரிவித்துள்ள யோசனையொன்றை மேற்கத்தைய வல்லரசுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

கடந்த இரண்டுமாத காலமாக நடைபெற்றுவந்தராஜதந்திர நடவடிக்கைகளைத் தொடர்ந்து இப்பொழுது இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன.

பெர்லின் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் மேற்கு ஜெர்மனியில் நடைபெற வேண்டுமென்ற சோவியத் யூனியன் யோசனையை மேற்கு வல்லரசுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. என்ருலும் மேற்கு பெர்லின் மட்டுமே பேசவேண்டும் என்ற சோவியத் யோசனையை இந்த நாடுகள் மறுத்துவிட்டன. இது சம்பந்தமான கடிதங்களை சோவியத் யூனியனுக்கு அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிகின்றது.

பெர்லின் நகர் சம்பந்தமான நான்கு வல்லரசுகளின் பொறுப்புக்களை அடிப்படையாக வைத்து முழு நகர் பற்றிய பிரச்னைகள் அனைத்துமே ஆலோசிக்கப்பட வேண்டும். என்று இந்த நாடுகள் தெரிவித்துள்ளதாகத் தெரிகின்றது:

பெர்லின் சம்பந்தமாக நடைபெறவிருக்கும் இந்தப் பேச்சுவார்த்தைகள் முதலில் தூதர்கள் மட்டத்தில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பத்து ஆண்டுகளின் பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெறவிருக்கின்றது.

பெர்லின் நெருக்கடி தீர்வதற்கு சோவியத் யூனியன் தெரிவிக்கும் யோசனைகளை ஏற்றுக்கொள்வதாக கிழக்கு ஜெர்மனி அறிவித்திருக்கின்றது. சோவியத் வெளிநாட்டு அமைச்சர் திரு குரோமிக் கோவ் கிழக்கு ஜெர்மனிக்கு விஜயம்செய்துவிட்டு திரும்பிப் போன பொழுது வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் மேற்கண்ட கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

மேற்காசிய நெருக்கடி

## வல்லரசுப் பிரதிநிதிகளின் அவசரக் கூட்டம்

நியுயோர்க், பெப் 28 மேற்காசிய நெருக்கடிக்கு ஒரு முடிவு தேடுவது சம்பந்தமாக நான்கு வல்லரசுப் பிரதிநிதிகள் நேற்று மீண்டும் கூடிப் பேசினார்கள்.

இஸ்ரேலுக்கு மேற்கொண்டும் சண்டை விமானங்களைக் கொடுப்பது சம்பந்தமாக அமெரிக்க அதிபர் திரு நிகஸன் முடிவு செய்வதற்கு ஒரு தினத்துக்கு முன்னதாக வல்லரசுப்பிரதிநிதிகள் அவசரமாகக் கூடிப் பேசியிருப்பதாகக் கூறப்பட்டது. நடைபெற்றதாகவும் சொல்லப்படுகின்றது.

கூட்டத்தின் பின்னர் அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால் மீண்டும் வல்லரசுப்பிரதிநிதிகள் விரைவில் கூடிப் பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### லண்டனில் அபா ஈபான்

இஸ்ரேல் வெளிநாட்டு அமைச்சர் திரு அபாஈபான் பிரிட்டனுக்கு வந்திருக்கிருர். ... வில்லையென்றும் இம்மாதிரி நடவடிக்கைகள் சம்பந்தமாக உலக அபிப்பிராயத்தைத் திரட்டவே இஸ்ரேல் விரும்புவதாகவும் அவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட விமானத்தில் இஸ்ரேலுக்கு வெடிமருந்துகள் கொண்டுபோகப்பட்டதாகவும் அதிலிருந்தே வெடிவிபத்து ஏற்பட்டது என்றும்கெய்ரோ பத்திரிகைகளில் வெளியான செய்திகள் மறுக்கப்பட்டுள்ளன.

சுவிஸ் விமானத்தில் குண்டு வெடித்தது சம்பந்த

## கேரள நாயர் சங்கத்தலைவர் மன்னத் பத்மநபன் மறைவு

கோட்டயம், பெப் 28 நாயர்சேவா சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் மன்னத் பத்பநாபன் கடந்த 25ம் திகதி கோட்டயத்தில் காலமானர்.

அவர் சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார். அவருக்கு வயது 93.

கேரளத்தில் ஈ. எம் எஸ். நம்பூதிரிபாத் தலைமையில் அமைந்த முதலாவது கம்யூனிஸ்ட் மந்திரி சபைக்கு எதிராக அவர் 'விமோசனப் போராட்டதை' நடத்தினர். அப்போராட்டத்தின் விளைவாக மத்திய அரசு கேரள மந்திரி சபையை டிஸ் மிஸ் செய்தது.

தார்மீக மறு மலர்ச்சி இயக்கத்தின் அழைப்பின் பேரில் 1959ம் வருடத்தில் ஸ்விட்ஜர்லாந்து, மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகளில் மன்னத் பத்மநபன் ஒருமாதம் சுற்றுப்பயணம் செய்தார்.

1966ல் அவருக்கு 'பத்மபூஷண்' பட்டம் வழங்கப் பட்டது

1949ல் திருவாங்கூர் அசெம்பிளிக்கு பத்தனம்திட்டா தொகுதியிருந்து அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967 பொதுத்தேர்தலில் இந்திய தேசிய காங்கிரசுக்காக அவர் பிரசாரம் செய்தார்.

1949 ஆகஸ்டில் திருவாங்கூர் தேவாஸ்வம் போர்டு அமைக்கப்பட்டது. அதன் முதல் தலைவராக மன்னத் பத்மநபன் இருந்தார்.

மன்னத் பத்மநபன் அவரது வாழ்க்கையை பள்ளி ஆசிரியராக ஆரம்பித்தார். பிறகு வக்கீலாகவும், நடிகராகவும் இருந்தார். 1914ல் நாயர் சேவை சங்கத்தை ஆரம்பித்தார். சர்வோதய தலைவர் கேளப்பன் அதன் தலைவராகவும், மன்னத் பத்மநபன் அதன் காரியதரிசியாக இருந்தார்கள்.

நாயர் சேவை சங்கத்தின் காரியதரிசியாக அவர் 31 வருடங்கள் இருந்தார். பிறகு அதன் தலைவராக [illegible] கள் இருந்தார்.

1924ல் ஆலயப் பிரவேசத்தி[illegible]க நடந்த வைக்கம்

கல்விப்பகுதியின்

## 'தமிழ் மலரில்' உள்ள குறைகள் என்ன?

### ஆசிரியர்கள் கூட்டத்தில் விளக்கம்

உடும்பராய், சனி மாணவர்கள் உபயோகித்து வரும் முதலாம் வகுப்புத் தொடக்கம் எட்டாம் வகுப்பு முடியவுள்ள தமிழ் மலரில் உள்ள நிறைகுறைகளை ஆராய்வதற்கான கூட்டம் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் சென்றபுதன் கிழமை நடைபெற்றது:

வித்தியாபகுதியினரால் கூட்டப்பட்ட இக்கூட்டத்தில் 1969-ம்ஆண்டில் குறிப்பிட்ட மாணவர்களுக்கு தமிழ் மலரை கற்பித்து வந்த ஆசிரியர்கள் கலந்து கொண்டுதமிழ்மலர் பற்றிய பொதுவான அபிப்பிராயங்களை கூறினர்.

குறித்த ஆசிரியர்களின் அபிப்பிராயங்களை ஒன்று திரட்டிவித்தியாபகுதியிடம் சமர்ப்பிப்பதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

"மகாவலி

## திட்டத்தை செயல்படுத்த இளைஞரை ஊக்குவிக்கவும்"

— வட. கல்வியதிபதி

பருத்தித்துறை, சனி 'வடபகுதி மக்களை நாட்டின் அபிவிருத்திக்குத் தம்மை அர்ப்பணிப்பதுடன் மகாவலிகங்கைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு தம் இளைஞரை ஊக்குவிப்பதற்கும் ஆயத்தமாயுள்ளனர்.'

இச்செய்தியை வடமாநிலக் கல்வியதிபதி திரு. எஸ். தணிகாசலம் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் உயர்கல்லூரியில் ஆரம்பித்த மரதன் ஓட்டத்தின் போது விடுத்தார். மகாவலி கங்கைத் திட்ட முதல்படியின் அங்குரார்ப்பணத்தை முன்னிட்டு பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பிய செய்தியின் சாரமே இதுவாகும்.

இம்மரதன் ஓட்டப்போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர் புலோலி இந்துக் கல்லூரி மாணவர், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவர் பங்குபற்றினர்.

வடபகுதி விஞ்ஞானக கல்வியதிபர் திரு. எம். அற்புதநாதன், பருத்தித்துறை உடுப்பிட்டி கல்வியதிகாரிகள் திருவாளர்கள் கே. நவரத்தினம், எஸ். மகேஸ்வரஐயர் ஆகியோரும் பங்குபற்றினர்.

"ஆசிரியர்சமசம்பளத்திட்டம்

## சில்வா கமிஷன் சிபார்சு இல்லாதது ஏன்?"

உரும்பராய், வெள்ளி "நாடு சுதந்திரமடைந்து 20 வருடங்களுக்கு மேலாகியும், சுயமொழியாசிரியர் சம்பளத்தை வில்மட் [illegible] சம்பளக் கமிஷன் [illegible]செய்து சமீபத்தில் உள்ள சில்வா கமிஷன் இடைக்கால அறிக்கையில் ... செய்யுமாறும், தமிழ்ப்பகுதி பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது என்ற தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தொழிற்சங்க

## ராஜாங்க அமைச்சர் 19-ல் யாழ் வருகிருர்

யாழ்ப்பாணம், ஞாயிறு தேசிய இளைஞர் சேவை இயக்கத்தை மாவட்ட ரீதியில் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்செய்துவைக்க ராஜாங்க அமைச்சா திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன இம்மாதம் 19ந் திகதி யாழ் நகர் விஜயம் செய்யவிருக்கின்ருர். அமைச்சருக்கு இங்கு சிறப்பான வரவேற்பு பசாரம் வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

(மல். நிரு)

## ஹோட்டல் ஊழியர்களுக்கு வைத்திய பரிசோதனை

கோட்டை, சனி நாட்டின் சகல பாகங்களிலுமுள்ள உணவுச்சாலைகள், சிற்றுண்டிச் சாலைகள், ஹோட்டல்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் யாவருக்கும் வைத்திய பரிசோதனை நடாத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரசாங்க வைத்திய அதிகாரிகள் இந்த வைத்திய பரிசோதனையை நடாத்தவுள்ளனர்.

மேற்படி ஊழியர்கள் சிலரிடம் உள்ள நோய்கள் அங்கு வந்து உணவு உண்ணுபவர்களுக்கு தொற்ருமல் இருக்கும் பொருட்டே அரசாங்கத்தால் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட விருக்கிறது.

ஹோட்டல் ஊழியர்களில் அநேகர் தொற்று வியாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பொது மக்கள் புகார் செய்தமையே மேற்படி நடவடிக்கையெடுக்கக் காரணமாகும். சௌக்கிய சுகாதார பரிசோதகர்கள் உதவியோடு வைத்திய பரிசோதனையை நடாத்த சுகாதார இலாகா ஏற்பாடுகள் செய்துவருகிறது.

### என்.எம் யாழ் விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு இலங்கை சமசமாஜக் கட்சித் தலைவரும் எட்டியாந்தோட்டை எம்.பி யுமான டாக்டர் என். எம் பெரேரா இம் மாதம் 4ம்திகதி யாழ்ப்பாணம் வருகின்ருர். இங்கு இவர் தமது கட்சியின் மாவட்டக் கிளையின் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொண்டு தற்போதைய அரசியல் நிலை பற்றி விளக்கம் கொடுப்பதுடன், பொதுத் தேர்தல் குறித்தும் ஸ்தல பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடாத்தவிருக்கின்ருர்.

(மல். நி)

### சின்னமௌலானு யாழ் வருவார்

மல்லாகம், சனி தென்னிந்திய பிரபல நாதஸ்வர இசையாளர் திரு. ஷேக் சின்னமௌலானு சித்திரைமாத முற்பகுதியில் நாதஸ்வரக் கச்சேரி செய்யும் பொருட்டு யாழ்ப்பா

### பிரியாவிடை

மாவிட்டபுரம், சனி காங்கேசன்துறை வைத்தியசாலையில் டாக்டராகக் கடமையாற்றி மாவட்ட சுகாதார அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் டாக்டர் திருமதி செல்வரத்தினத்திற்கு காங்கேசன்துறை வைத்தியசாலை அட்டன்டன்மார் யூனியன் பிரவுபசாரமளித்தது.

டாக்டர் செல்வி பாலசிங்கம் உரையாற்றுகையில் டாக்டர்கள் தன்னலமற்ற சேவை செய்ய வேண்டுமென்ருர். பத்திநாதன், பார்வதி, சோமசுந்தரம் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்கள். பிரிந்து செல்லும் டாக்டருக்கு, டாக்டர்களும் ஊழியர்களும் தனித்தனியே பிரிவுபசாரவிழாக்கள் நடாத்தினர்.

### அங்கவீனரும் சிங்களக்கடிதமும்

சுழிபுரம், சனி பனிப்புலம் கிராமத்தைச் சேர்ந்த அங்கவீனர் ஒருவர் தமது பெயருக்கு வந்த சிங்களக் கடிதம் ஒன்றை வாசித்துஅறிய படாதபாடுபட்டு கடைசியில் ஒருவாறு விஷயத்தை அறிந்து ஆறுதல் அடைந்தார். நொண்டியான இவர் தமக்கு மூன்று சக்கரச் சைக்கிள் ஒன்று வழங்குமாறு சமூகசேவை அமைச்சருக்கு எழுதியிருந்தாராம். அக்கடிதத்திற்கான பதிலே தனிச்சிங்களத்தில் வந்திருந்ததாம்:

பகுதிக் காரியாதிகாரியுடன் தொடர்புகொண்டு சைக்கிள் வண்டியைப் பெற்றுக்கொள்ளுமாறு அமைச்சு அனுப்பிய சிங்களக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலங்களுக்குப் பதிலாக சம் பந்தமாக அமெரிக்க அதி பர் நிக்ஸன் முடிவு செய்வதற்கு ஒரு தினத் துக்கு முன்னதாக வல்லர சுப்பிரதிநிதிகள் அவசரமா கக் கூடிப் பேசியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

மேற்காசியாவில் நிலைமை மோசமாகிக் கொண்டிருப் பது சம்பந்தமாக ஐ. நா. பொதுச் செயலாளர் சுட் டிக்காட்டியதைத் தொடர் ந்து இந்த அவசரக்கூட்டம்

லண்டனில்

## அபா ஈபான்

இஸ்ரேல் வெளிநாட்டு அமைச்சர் திரு அபாஈபான் பிரிட்டனுக்கு வந்திருக்கி ருர்.

இஸ்ரேலை நோக்கிப் பறந்து கொண்டிருந்த விமானத்தில் குண்டு வெடித்து அதிலிருந்த 47 பேரும் மரணமான சம்பந்தமாக இஸ்ரேல் பழிவாங்கும் நட வடிக்கைகளில் இறங்க

பட்டதாகவும் அதிலிருந்தே வெடிவைத்து ஏற்பட்டது என்றும் கெய்ரோ பத்திரிகை களில் வெளியான செய்தி கள் மறுக்கப்பட்டுள்ளன.

சுவிஸ் விமானத்தில் குண்டு வெடித்தது சம்பந்த மாக மேற்கு ஜெர்மனியில் கைதுசெய்யப்பட்ட அராபி யர் ஒருவர் குண்டு எடுத் துச் செல்வதற்கு இருநபர் களுக்கு உதவி செய்ததாக ஒப்புக் கொண்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

# ரொடீஷியா குடியரசாகிறது

## ஆபிரிக்க தலைவர்கள் வன்மையாக கண்டிக்கிருர்கள்

அடிஸ்அபாபா, பெப் 28

ரொடீஷியா குடியரசாக இருப்பதை ஆபிரிக்க நாடுக ளின் பல தலைவர்கள் கண் டித்திருக்கிறார்கள்.

அடிஸ்அபாபாவில் நடை பெறும் ஆபிரிக்க நாடுக ளின் தலைவர்கள் கூட்டத் தில்மன்னர்ஹெய்லிசெலாசி தலைமைவகித்துப் பேசுகை யில், ரொடீஷியா ஆட்சியா ளர்களை வன்மையாகக் கண் டித்தார்.

ரொடீஷியாவில் பெரும் பான்மை மக்களின் உரிமை களை நிலை நாட்டுவதற்கு முன்வரும்படி பிரிட்டனையும் அமெரிக்காவையும் மன்னர் ஹெய்லி செலாசி கேட்டுக் கொண் டார்.

ரொடீஷியஅரசுக்கு ஆதர வளித்து ஊக்குவித்துவருவ தாகப் பிரிட்டனை கென்யா கண்டித்திருக்கின்றது. ரொடீஷியாவில் ஆபிரிக்க மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று அதிபர் கென்யாட்டா கூறியிருக்கி ருர்.

ரொடீஷியா குடியரசா வதையொட்டி அந்த நாட் டுடன் ராஜீய உறவுகளைத் தொடர்வதா இல்லையா என் பது பற்றி அமெரிக்கா ஆலோசித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

ரொடீஷியா நாடு அடுத்த திங்கட்கிழமை முதல் குடியரசு நாடாகிறது. வரு கிற ஏப்ரல் மாதம் ரொடீ ஷியாவில் பொதுத்தேர்தல் நடைபெறுமெனவும் அறி விக்கப்பட்டுள்ளது. ரொடீ ஷியாவின் தேசிய தினம் மார்ச் 2-ம் திகதி கொண் டாடப்படும்

வட்டல் நாகராஜ்

## சபைக்கு வர அனுமதி

பெங்களூர், பெப் 28

மைசூர் சட்ட சபைக்கூட் டங்களில் கலந்து கொள்ள முடியாமல் திருவட்டல் நாக ராஜ்மீதுவிதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவுவாபஸ்பெற ப்பட்டுள்ளது.

பெப்ரவரி 23-ம்திகதி அவர் சபையில் வரம்பு மீறி நடந்து கொண்டமைக்காக தடைவிதிக்கப்பட்டிருந்தார் சபையில் தாம் நடந்து கொண்டமுறை குறித்து அவர் கவலைதெரிவித்து சபா நாயகருக்குக் கடிதம் எழுதிய தைத்தொடர்ந்து தடை உத் தரவு ரத்துசெய்யப்பட்டது திரு வட்டல் நாகராஜ் தமிழ் நாட்டிலுள்ள தாள வாடி பகுதியை மைசூருடன் இணைக்கவேண்டுமெனகோரி வருகிருர்.

## பரிசு பெறும் இந்திய டாக்டர்

சென்னை, பெப்.25

தொழுநோய் நிவாரணப் பணிக்காக ஒவ்வொரு வரு டமும் அளிக்கப்படும் டாமீன் தத்தன் பரிசு இந்த வருடம் டாக்டர் தர்மேந்திரா என்ற இந்தியருக்குக் கிடைத்திருக்கிறது.

இப்பரிசைப் பெறும் முதல் இந்தியர் டாக்டர் தர்மேந்திராதான். ஆசியா விலேயே முதன் முதலாக இப்பரிசை அவர் பெறுகி ருர்.

செங்கற்பட்டு தொழு நோய் மத்திய ஆராய்ச்சிக் கழகத்தில் டாக்டர் தர்மேந் திரா டைரக்டராக இருந்தி ருக்கிருர். அதிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு இந்திய மரு த்துவ ஆராய்ச்சிக்கழகத் தில் அவர் பணியாற்றுகிருர் உலக சுகாதார ஸ்தாபன ஆலோசகராக பல நாடுகள் அவரது சேவையைப் பயன் படுத்துகின்றன

குழந்தைகளுக்குத் தொழு நோய் வராமல் தடுப்பது பற்றி அவர் சமீபத்தில் ஆராய்ச்சிசெய்திருக்கிருர்.

ரஷ்யாவில்

## உப்புச்சுவர் ஆஸ்பத்திரி

மாஸ்கோ, பெப். 28

ரஷ்யாவில் பூமிக்கு அடி யில் ஓர் ஆஸ்பத்திரி. அதன் சுவர் உப்பினுல் ஆனது அங்கு ஆஸ்த்மா நோய் வந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது

மேற்கு உக்ரெயினில் ஒரு உப்புச் சுரங்கத்தில் சுமார் 600 அடி ஆழத்தில் அந்த ஆஸ்பத்திரி இருக்கிறது.

'டாஸ்' இதை அறிவிக் கின்றது

சிகிச்சைக்காக எந்த மருந் தும் கொடுக்கப்படுவதில்லை. உப்பு ஆவியுடன் கலந்த காற்றை சுவாசிப்பதே வியா திக்குச் சிகிச்சையாக அமை ந்துள்ளது

அந்த ஆஸ்பத்திரி சமீபத் தில்தான் திறக்கப்பட்டது. உப்புச்சுரங்க தொழிலாளர் களிடையே ஆஸ்த்மா வியா தியால் அவஸ்தைப்படுபவர் கள் எவரும் இல்லை என்று தெரிந்தது. ஆஸ்த்மாவியாதி உள்ளவர்கள் அங்கு வந்த தும் வியாதிக்கொடுமையை மறந்து நிம்மதியாக இருக்கி ருர்கள் என்பதும் தெரிந் தது. அதிலிருந்து இந்த ஆஸ்பத்திரி உருவாயிற்று

## பாரதிதாசனுக்கு சாகித்தியவிருது

புதுடில்லி, பெப் 28

1969ம் ஆண்டுக்கான இந் திய சாகித்திய அக்கடமி விருது காலஞ்சென்ற புரட் சிக்கவிஞர் பாரதிதாசனின் 'பிஸ்ராந்தையர்' நூலுக்குக் கிடைத்துள்ளது.

பல்வேறு மொழிகளைச் சேர்ந்த 16 நூல்களுக்கு இந்தவிருது கிடைத்திருக்கி றது. செப்புப்பட்டயமும் 5 ஆயிரம் ரூபாய் பரிசும் வழங்கப்படும்.

நாயர் சேவை சங்கத்தின் காரியதரிசியாக அவர் 31 வருடங்கள் இருந்தார். பிறகு அதன் தலைவராக 3 வருடங் கள் இருந்தார்.

1924ல் ஆலயப் பிரவேச த்திற்காக நடந்த வைக்கம் சத்தியாக்கிரகத்திலும் மன் னத் பத்மனுபன் பங்கு கொண்டார்.

## "நாயன்மார் கடவுளைக் கண்டவிதம்"

பேராதனை, சனி

''செல்வத்தாலும் அறி வாலும் காணமுடியாத இறைவனைப் பக்தியாலும் அனுபவங்களாலும் மட் டுமே காணமுடியும் அறிவுக் கும் செல்வத்துக்கும் அதி பதிகளான நாமகளுக்கும் திருமகளுக்கும் தலைவர் களான பிரமாவிஷ்ணு காண முடியாத இறைவனை உண் மையான பக்தியினுல்நாயன் மார்கள் காணமுடிந்தது.

இவ்வாறு கடந்த வெள் ளிக்கிழமை பேராதனைப் பல் கலைக்கழக குறிஞ்சிக்குமரன் கோயிலில்' நல்லைத் திரு ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தம்பிரான் சுவாமிகள் கூறினுர்.

இலங்கைப் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் விழாவில் அவர் அறிவுத் துறையிற் சிறப்படைந்து விளங்கும் பல்கலைக்கழக மாணவர்கள் பக்திநெறியி லும் சிறப்படைந்து சமுதா யத்தை நல்வழியில் நடத் திச்செல்ல வேண்டுமென வும் கேட்டுக்கொண்டார்.

இந்துமாணவர் சங்கபுதிய உறுப்பினர்களாக பின்வருப வர்கள் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். தலைவர் க. ஜெய பாலன், உபதலைவர் க. இரத்தினவேல் இணைச்செய லாளர்கள்: செல்வி ம. வேலுப்பிள்ளை, சி. சிவயோக ராஜசிங்கம், பொருளாளர்: செல்வி த. பொன் னுத்துரை, இதழாசிரியர். சி. சோமஸ்கந்தன் நூலா ளர்: மு. சிவசிதம்பரராசன்.

## சத்தியசாயிபாபா பஜனை

கொழும்பு, சனி

கொழும்பு கொட்டாஞ் சேனை பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா சத் சங்கத்தினர் மகா சிவராத்திரியைக் கொண்டாடுமுகமாக, பிரத் தியேக பஸ்களில் கதிர்கா மம் செல்கின்ருர்கள்.

கதிர்காமத்தில் 7-ந் திகதி சனிக்கிழமை காலை நகர சங்கீர்த்தனமும், மாலையில் சாயிகீத பஜனையும் செய் வார்கள்.

20 வருடங்களுக்கு மேலாகி யும், சுயமொழியாசிரியர் சம்பளத்தை வில்மட் பெரேரா சம்பளக் கமிஷன் சிபார்சுசெய்து சமீபத்தில் உள்ள சில்வா கமிஷன் இடைக்கால அறிக்கையில் சமசம்பளம் பற்றி யாதும் தெரிவிக்கப்படாததனை ஆசி ரியர் உலகம் பெரிதும் மன வேதனையுடன் நோக்குகிறது சில்வா கமிஷன் இறுதி அறிக் கையிலாவது இது விஷய மாய் விமோசனம் அளிக்க லாமென எதிர்பார்க்கிருேம் ஆசிரியர்களுக்கு ஏனைய அர சாங்க ஊழியர்களுக்குப் போல் பென்ஷன் வழங்கு வதைப் பாராட்டுவதுடன், தேசிய அரசாங்கம் அதை ஏற்று அனுசரணைக்குக் கொண்டுவருமென்றும் நம்பு கிருேம்.''

அகில இலங்கைத் தமிழா சிரியர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது மேற் படி சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சங்கக் காரியாலயத்தில் திரு. இ. கந்தையா தலைமை யில் நடைபெற்ற இக்கூட் டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்து கிடைக்கும்வரைக் கும் தமிழ்மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர் அனை வரும் ஒரு ஸ்தாபனமாக இந்நாட்டில் இயங்கவேண் டிய தேவையேற்பட்டுள் ளது. நுவரேலியா, கண்டிப் பகுதிகளில் தமிழாசிரியர் தொகை கூடிவிட்டதாகச் சொல்லப்படுவது தவறு. அவ்விடமுள்ள தமிழரா யுள்ள மாணவர் சராசரிக்கு தமிழராயுள்ள ஆசிரியரல்லாதவர்களை நிய மித்துள்ளதனுலேயே மேல திகம் காணப்படுவதாகவும் அறிகிருேம்'' என்றும் அவர் கூறினுர்.

நுவரெலியா, கண்டி, பண் டாரவளை, இரத்தினபுரிப் பகுதிகளிலுள்ள தமிழ் மாணவர் சராசரிக்கமைய தமிழாசிரியர் நியமிக்கப் படாது இருட்டடிப்புச்செய் யப்படுகிறது. தமிழராயுள்ள மாணவர் சராசரிக்குத் தமி ழாசிரியராயுள்ள ஆசிரியர் களால் நிரப்பப்படாது வேறு ஆசிரியர்களால் நிரப் பப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி பிரிவுகளிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளில் (முஸ் லிமல்லாத) தமிழாசிரியர் தொகை இவற்றைப் பெற் றுக்கொள்வதற்குப் பாராளு மன்ற மூலம் நடவடிக்கை எடுக்குமாறும், அவ்விடங் கட்கு அவ்விடமுள்ள தரா தரப்பத்திர முடையோராய் விண்ணப்பித்த தமிழாசிரி யர்களை நியமித்தற்கு ஆவன பாராளுமன்ற அங்கத்தவர் களைக் கேட்டுக்கொள்ளு கிறது என்ற தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

## தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்வாராம்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறை சிமெந் துத் தொழிலாளரின் 25 கோரிக்கைகளையும் அமைச் சர் 16 நாட்களில் நிறை வேற்ருவிட்டால் தொழிற் சங்க நடவடிக்கை மேற் கொள்வதென காங்கேசன் துறை சிமெந்துக் கூட்டுஸ் தாபன யூனியன்கள் முடிவு செய்துள்ளனவாம்.

சிமெந்துக் கூட்டுஸ் தாபன யூனியன்கள் விசேஷ கூட்டத்திற்கு திரு எஸ். கண பதிப்பிள்ளை தலைமை வகித் துப் பேசுகையில் உரிமை களைச் சமாதானமாகப் பெற எடுக்கப்பட்ட நட வடிக்கைகளினுல் எவ்வித பயனும் கிடைக்கவில்லை யென்ருர்.

## 'அண்ணு வழியில் தம்பி

மாவிட்டபுரம், வெள்ளி

''அண்ணு வளர்த்த இயக் கத்துக்கு இன்று அருமைத் தம்பி கருணுநிதி தலைமை தாங்கி வழிநடாத்தி வருகி ருர். தனிநாடு கோரிக்கைக் குப்பின்பு இன்று திராவிடக் கழகம் இந்திய ஒருமைப் பாட்டைக் காப்பாற்றுவது டன் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று வாதிட்டு வருகின்றது'

இவ்வாறு காங்கேசன் துறை தமிழ் கனல்மன்ற ஆதரவில் நடந்த அண்ணு விழாவில் கலந்துரையாற்று ரையாற்றுகையில் மல்லா கம் கிராமசபைத் தலைவர் திரு. பொன்னம்பலம் கூறி ஞர்.

.........

## ஆதரவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

தற்போதைய அரசியல் கட்சிகள் நமது பிரச்னை களை நல்ல முறையில் தீர்த்து வைக்கத்தவறிவிட்டன. இனிமேல் நமக்கென ஒரு புதிய பாதையை வகுத்து அரசியலில்ஈடுபட வேண்டும் என வட பிரதேசக்கிளைப் பொதுச்சபையின் தீர்மானத் தை அங்கீகரிக்க வேண்டும் என்றதீர்மானம் கோப்பாய் நாவலடி சனசமூக நிலையத் தில் திரு. கே. சதானந்தன் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்க கோப் பாய்த் தொகுதிக்கிளைக் கூட் டத்தில் நிறைவேற்றப்பட்ட டது (மல். நிரு)

மல்லாகம், சனி

தென்னிந்திய பிரபல நாதஸ்வர இசையாளர் திரு. ஷேக் சின்னமௌலானு சித்திரைமாத முற்பகுதியில் நாதஸ்வரக் கச்சேரி செய் யும் பொருட்டு யாழ்ப்பா ணம் வரவிருக்கின்ருர். புன் னுலைக்கட்டுவன் பிள்ளையார் கோவில் புதியதேர் வெள் ளோட்டவைபவ தினத் தன்று நாதஸ்வர இசை வழ ங்க திரு. சின்னமௌலானு அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிகிறது.

## வாழ்க்கைநெறிக்கு நல்ல நூல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''சொல்நயம், சுவைநலம் மிக்கசிறந்தஇலக்கியப்பண்பு நிறைந்த வரலாற்றுச்சிறப்பு மிக்க சேக்கிழார் புராணத் தை மக்கள் எல்லோரும் படி த்து தமது வாழ்க்கை நெறி யை நல்ல முறையில் வகுத் துக் கொள்ளல் வேண்ம்டு'' எனவித்துவான் திரு. கே. கே நடராஜன் யாழ்ப்பாணம் செங்குந்தாக் கல்லூரியில் நடைபெற்ற சேக்கிழார் விழாவில் பேசுகையில் குறிப் பிட்டார். கல்லூரி அதிபர் திரு எஸ். பீ. நடராசா விழா வுக்குத் தலைமை வகித்தார்.

கொழும்புத்துறை ஆசிரி யர்பயிற்சிக் கல்லூரி அதி பர் திரு. கே. விசுவலிங்கமும் பேசினுர். (மல். நிரு)

## 750 ரூபாய் அபராதம்

மட்டுவில், சனி

5220 திரும் கசிப்பு வைத் திருந்ததாக கைது செய்து சாவகச்சேரி சப் இன்ஸ்பெக் டர் திரு. ஜெயசூரியாவால் கோர்ட்டில் ஆஜர் செய்யப் பட்டவருக்கு மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா ரூபா 750 அபராதம் செலுத்தும் படி தீர்ப்பளித்தார்.

கைதடியைச்சேர்ந்த கந் தன் செல்லன், வெள்ளையன் கந்தன், பண்டாரி சின்னத் துரை ஆகிய மூவரும் 5220 திருகசிப்புவைத்திருந்ததாக வும் கசிப்பு வடிக்கும் உபகர ணங்களையும் வைத்திருந்த தாகவும் சாவகச்சேரி சப் இன்பெக்டர் திரு. ஜெயசூ ரியா தலைமையிசென்ற சார் ஜன் நந்தசேனு, கான்ஸ்ட பிள் சில்வா ஆகியோர் இவர் களை கைது செய்து சாவகச் சேரி மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர்

வெள்ளையன் கந்தன் குற் றத்தை ஒப்புக்கொண்ட தைத்தொடர்ந்து 5220 திரும் கசிப்பு வைத்திருந்த தற்கு 500ரூபாவும், உபகர ணம்வைத்திருந்தகுற்கு 250 ரூபாவும் மொத்தம் 750 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

தகாம்.

பகுதிக் காரியாதிகாரி யுடன் தொடர்புகொண்டு சைக்கிள் வண்டியைப் பெற் றுக்கொள்ளுமாறு அமைச்சு அனுப்பிய சிங்களக் கடிதத் தில் தெரிவிக்கப்பட்டிருந்த தாம்.

## நாடகப்போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாவலர் ஞாபகார்த்த மூன்ருவது வருட நாடகப் போட்டியை அடுத்த மாதம் 13-ம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு குடும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத் தினர் குடும்பசிட்டி தமிழ்க் கலவன் பாடசாலை பொன். பரமானந்தர் ஞாபக மண்ட பத்தில் நடாத்தப்படவிருக் கின்றனர். போட்டிக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 1-ம்திகதிவரை ஏற் றுக்கொள்ளப்படுமென்றும், இலங்கையின் எந்தப்பாகத் திலிருந்தும் எந்த நிறுவனங் களும் போட்டியில் கலந்து கொளளலாமென்றும் அறி விக்கப்பட்டுளது.

போட்டியில் வெற்றியீட் டும் முதல் நாடகத்திற்கு தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படும். இரண்டாம் மூன்ரும் இடங்களுக்குத் தெரிவாகும் நாடகங்களுக்கு வெற்றிக்கேடயங்கள பரி சளிக்கப்படும்

## சமூகக் கலைமன்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் செங்குந்த இந்துக்கல்லூரியின் சமூகக் கலைமன்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின் வருவோர் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டுள்ள னர்.

தலைவர்: எஸ். சிவமலர், உபதலைவர்: என். சற்குண ராசா, இணைச்செயலாளர்: ரி. நற்குணராசா, எஸ். கருணுநிதி, பொருளாளர்: ஈ. சற்குணநாதன். (மல். நி)

## கோப்பாய் போட்டிகள்

உரும்பராய், சனி

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் கனிஷ்ட பிரிவுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டி இம் மாதம் 9 10ந் திகதிகளில் நீர்வேலி அத்தியார் இந் துக்கல்லூரியில் நடைபெற விருக்கிறது.

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகள் பலவற்றில் இருந்து 300க்கு மேற்பட்ட வீரர்களுக்கு மேல் பங்கு பற்றும் இவ்விளையாட்டுப் போட்டியில் ஆசிரியர்களும் சில போட்டிகளில் பங்கு பற்றுகிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அதிக பட்சம் கருத்துச் சுதந்திரத்திற்கு ஆக்கமளித்தலே வெற்றியடைவதற்கான நிபந்தனையாகும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 18-ந் திகதி (1-3-70)


## பாலைதீவு படகு விபத்து

குறிப்பாக யாழ்ப்பாணத்தினதும் பொதுவாக இலங்கையினதும் சமீபகாலச் சரித்திரத்தில் கண்டும் கேட்டுமறியாத துயரச்சம்பவம் சென்ற வெள்ளிக்கிழமை இரவு பாலைதீவுக்கடலில் நடந்திருக்கிறது. பாலைதீவுத் திருநாளுக்குச்சென்ற யாத்திரிகர் படகுகவிழ்ந்து பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் எழுபது பேர் மாண்ட பரிதாப சம்பவத்தைத்தான் குறிப்பிடுகிறோம். குழந்தையை இழந்த தாயும், மனைவியையும குழந்தையையும் இழந்த கணவனும் பிள்ளையை இழந்த தந்தையும் கதறி அழும் பரிதாபக் காட்சியை கண்டோர் கண்ணீர் விடாமலிரார்; கல்நெஞ்சம் படைத்தோரின் உள்ளமும் கூடக்கலங்கும்.

மனைவி, மக்களை, தந்தையை, தனயனை, அன்னையை, சகோதர, சகோதரியை இழந்து தவிக்கும் இந்த அப்பாவி மக்களுக்காக நாமும் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதையும் விபத்தில் சிக்கி அகாலமரணமடைந்தவர்களின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதையும் தவிர வேறு என்ன செய்யமுடியும்.

என்றாலும் இதுபோன்ற கோரச்சம்பவங்கள் இனியும் நிகழாமல் கவனித்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும். இரண்டுவருடங்களுக்கு முன்னர்தான் நயினாதீவு யாத்திரிகர்கள் சிலர் படகு விபத்தில்சிக்கிஉயிரிழந்தனர். அதில் மாண்டோர் தொகை குறைவானாலும் இரண்டு வருடங்கள் கழித்து பாலை தீவுக்கடலில் இக்கோர விபத்து நடந்திருக்கிறது. நயினாதீவு படகு விபத்தின் பின்னர் இப்படி ஒரு சமயம் நிகழும் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் இதுமோசமானதாக இருக்கிறது.

யாழ்ப்பணப்பகுதியிலுள்ள தீவுகளுக்குச் சரியான முறையில் படகுச்சேவைகள் இல்லையென்று பலதடவைகளிலும் எடுத்துக்கூறியும் அந்தச்சேவை சீர்செய்யப்படாததுமட்டுமல்ல, கோயில் திருநாள் சமயத்தில் கூட படகுச்சேவை சரியாக நடைபெறுவதற்கு உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தத் தவறுவதும் இந்தச்சம்பவங்களுக்குக்காரணமாகும்.

எதெதெற்கெல்லாம் ஏதேதோ படகுகளை உபயோகிக்கும் அரசாங்கம்யாத்திரிகர்களின் நலனுக்கும் வசதிக்கும் அவற்றை பயன்படுத்தக்கூடாதா?

## கங்கை திரும்புகிறது

இலங்கையின் சரித்திரத்தையே மாற்றியமைத்து புதிய யுகம் ஒன்றையே உருவாக்கும் மகாவலிகங்கையைத் திசை திருப்பும் வேலை இறைவழிபாட்டுடன் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டிருக்கிறது. பொல்கொல்லையில் நடைபெற்ற கோலாகலமான வைபவத்தில் மகாவலி கங்கையை திசை திருப்பும் முதற்கட்டவேலையைப் பிரதமர் ஆரம்பித்துவைத்து "நமது நாடு பொன்கொழிக்கும் நாடாக மிளிரும்காலம் வெகுதூரத்தில் இல்லை" என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். இந்த நம்பிக்கைவீண்போகமுடியாது பியதும் உணவில் தன்னிறைவு காண்பதுடன் இங்கிருந்து வெளிநாட்டுக்கும் உணவுப் பொருள் ஏற்றுமதி செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்படுமென்றும் இதன் மூலம் கிடைக்கும் பணத்தைக்கொண்டு இங்கு புதிய புதிய கைத்தொழில்களை ஆரம்பித்து நமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியுமென்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவிக்கிறார்

மகாவலிகங்கை திசை திரும்பினாலும் அதுவடக்கே வந்து சேருமா என்ற சந்தேகம் வடபகுதி மக்கள் மத்தியில் நிலவாமலில்லை.

# "ஆசிரியர்களின் குறைகள் ஆட்சி மன்றத்தில் ஒலிக்கவேண்டும்"

## ஆசிரியர் பிரச்னைகளைத் தீர்க்க இதுவேவழி என்கிறார் ஹண்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

'யாழ்ப்பாணத்தில் கல்வி ஒரு குடிசைக் கைத்தொழிலாக வந்துவிட்டது. ஒவ்வொரு பகுதியிலும் மூன்று அல்லது நான்கு சிறுவர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 5 வயதிற்கு முன்னர் சிறுவர்கள் பாடசாலையில் அனுமதிக்கப்படமாட்டார்களென அரசாங்கம் அறிவித்ததைத்தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பல காரணங்களை முன்னிட்டு சிறுவர் பாடசாலைகளுக்கு அனுப்பிவருகின்றனர்'

வடமாகாண ஆசிரிய சங்க கந்தோரில் நேற்று நடந்த தேசிய ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் திரு. ஹண்டி பேரின்பநாயகம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. எல் எம் பெரேரா தலைமையில் நடந்த கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

மகஜர் மூலமோ கடிதங்கள் மூலமோ தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலமோ ஆசிரியர்கள் தங்கள் குறைபாடுகளைத் தீர்க்க முடியாது. ஆடசிமன்ற உறுப்பினர்கள் உதவியைக் கொண்டு உங்கள் பிரச்னைகளை ஆட்சிமன்றத்தில் எடுத்துரைப்பதின் மூலமே அவற்றைத் தீர்க்கமுடியும். உங்களுக்காகப் பாடுபடும் ஒரு குழுவினரையோ ஒரு கட்சியினரையோ நீங்கள் பக்கபலமாக வைத்திருக்க வேண்டும். அரசாங்க எம்பிக்களையோ அரசாங்கத்திற்கு ஆதரவான எம் பிக்களையோ துணைகொண்டு உங்கள் குறைபாடுகளைத் தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும்

உங்கள் இலாகாவின் எதிரான நடவடிக்கைகளிலிருந்து உங்களைப் பாதுகாக்க முடியாவிடில் ஆட்சிமன்றத்தில் உங்கள் பிரச்னைகளை எடுத்துக் கூறக்கூடிய எம்பியின் உதவியை நாடுங்கள்

தேர்தல் நெருங்கிவந்து கொண்டிருக்கிறது, உங்கள் பிரச்னைகளுக்காக வாதாடக்கூடிய, உங்கள் பிரச்னைகளுக்காகப் போராடக்கூடிய கட்சிகளுக்கு உங்கள் ஆதரவை வழங்கவேண்டும்.

மாணவர்களுடன் ஆசிரியர்களுக்கு மிகவும் நெருங்கிய தொடர்பு இருக்குமானால் மாணவர்களின் நலன்களில் ஆசிரியர்களுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் பெற்றோர்கள் ஆசிரியர்களை எதிர்நோக்கும் பிரச்னைகளில் அக்கறைகாட்டத்தவறமாட்டார்கள்

## பட்டதாரிகள் தீர்மானம்

கோப்பாய், சனி

'அகில இலங்கையிலுமுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்குவேலைவழங்கும் பணியகம்நிறுவப்பட்டதன்நோக்கம், எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் நன்றாகவும் துரிதமாகவும் நிறைவேற்றப்படல் வேண்டும்''.

மேற்கண்ட தீர்மானம் அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள்சங்க கோப்பாய் கிளையின் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இக் கூட்டம் கோப்பாய் நாவலடி சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் திரு. கே. சதானந்தன் தலைமையில் நடைபெற்றது: கோப்பாய் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் நூற்றுக்கு மதிகமான பட்டதாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

வேலையற்ற பட்டதாரிகளின் ஆசிரிய நியமனத்தை தேர்தலுக்கு முன்னர் வழங்க வேண்டுமென ஆட்சி மன்ற உறுப்பினர்கள் மூலம் பிரதமரை வலியுறுத்துவதென்ற தீர்மானம் உட்பட வேறுசில தீர்மானங்களும். நிறைவேற்றப்பட்டன.

# ஐயாறன் எழுதுவது..

கப்பல் வழியே இந்தியா செல்ல தலைமன்னாருக்கு முதல் நாளே சென்றதாகக் கூறினேனல்லவா? அங்குள்ள மாரியம்மன் கோவிலைப்பற்றி திருப்பணித் தவமணி புரக்டர் சிவசுப்பிரமணியம் அவர்கள் 'ஈழநாட்'டில் தனிமையில் இனிமை காணக்கூடியதென்று எழுதியதால் அங்கு செல்ல என்மனம் தூண்டியது தைப்பூசம், நல்ல நிலவு. அங்கு சென்றேன். மெய்மறந்து இரண்டொரு மணி நேரம் அங்கு தங்கி இருக்கையில் எவ்வளவு இன்பம்! கோவில் இருக்குமிடத்தில் உணவுப் பிரச்னை இல்லை. குருக்கள் மகாதேவசர்மா அன்புடனே உபசரித்தார்.

அக்கோயில் நிர்வாகம் இப்போது திருக்கேதீச்சரம் திருப்பணிச் சபையாரிடமுள்ளதாயும் நிர்வாகம் சிறப்பாக நடப்பதாகவும் அறிந்தேன். இக்கோயில் திருப்பணியும் செய்ய வேண்டியுள்ளது. தலைமன்னாரில் தங்கி இனி பல்லாயிரம் பிரயாணிகள் இவ்வழி செல்லக்கூடும். ஆனால் அங்கு தங்கி இருக்க வசதியான இடமில்லை. சிறிய மடமொன்று கட்டியுள்ளனர். அதில் ஒரு பள்ளிக்கூடமுள்ளது. அதை வேறிடத்துக்கு மாற்றிவிட்டு மடத்தை விஸ்தரித்து, அங்கு பத்திரமாகத் தங்கி இருக்கவும் பல வசதிகள் செய்வது மிக மிக அவசியம். பாடல்பெற்ற ஸ்தலமான திருக்கேதீச்சரம் பக்கத்தில் உள்ளதை, தலைமன்னார் ஸ்டேஷனில் பெரிய எழுத்துக்களில் பலகையில் எழுதி, பலருக்கும் தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவித்தால் பலர்திருக்கேதீச்சரத்தைத் தரிசிக்கச் செல்லுவர்.

இந்தியாவில் இராமேச்சரம் எப்படி முக்கியமோ அதைப்போல் அதற்கு நேர் எதிர்கரையிலுள்ள திருக்கேதீச்சரமும் முக்கியமான புண்ணியத்தலம். ஸ்ரீராமர் பாரதநாட்டுக்குத் திரும்புமுன் இங்கேயும் சென்று வழிபட்டார் என்பது ஐதீகம்.

தலைமன்னார் மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்திலே தான் சட்டவிரோதக் குடியேற்றக்காரரின் தடை பிரயாணிகளுக்கும் பயனுள்ள முறையில் இக் கோயிலும் மடமும் நடைபெறுமாயின், அம்மன் திருவருளால் திருப்பணிக்கு என்ன குறை? அங்குள்ள சைவமக்கள் இதில் பக்தியுடன் ஈடுபட்டுள்ளது மகிழ்ச்சி அளித்தது.

0 0 0

கப்பலில் மேல்தளமெல்லாம் அநேகமாகக் காலி. கீழ்த்தளத்தில்தான் கூட்டமெல்லாம். மூன்றும் வகுப்புக்கு 'பீக்ஸும்' சேர்த்து கப்பல் கட்டணம் மட்டும் சுமார் 15 ரூபாய். மேல் தட்டுக்கு 45 ரூபாய்! இந்த அந்தமான கட்டணத்தைக் குறைக்கப்போவதாக ஓர் அன்பர் தெரிவித்தார். அது எப்போதோ? கீழ்த்தட்டில் கூட்டம் குறைய வேண்டுமாயின் மேல்தட்டு கட்டணத்தை பெரிதும் குறைக்க வேண்டும். கட்டணம் காரணமாக கப்பலில் பாதி யிடத்தை காலியாக விட்டு வைப்பது எவ்வகையிலும் சரியல்ல.

கீழ்த்தட்டு மிக சுத்தமாக இருப்பதுடன் அங்கு நல்ல சாப்பாடு நியாயமான

இர்வின் கப்பல் கப்டனை எட்வர்ட்பூபாலராயன்கீழக்கரையைச் சேர்ந்தவர். 22 வருட காலமாக இச்சேவையிலுள்ளாராம். அவர் நட்பு கிடைத்து பல விஷயங்களையும் தெரிந்து கொண்டேன். அவரும் வேறு பல அதிகாரிகளும் தனுஷ்கோடிக்குப் எதில் இராமேச்சரமே இறங்குதுறையாகத் தொடர்ந்து இருக்கவேண்டுமென்றும் கருத்துத் தெரிவித்தனர். இராமேச்சரத்திலே இறங்குதுறையை வசதியாகக் கட்ட முடியுமென்றும் பிரயாணிகளுக்கு இதுவே தனுஷ்கோடியை விட பலவிதங்களிலும் நன்மையாகுமென்றும் கருத்துத் தெரிவித்தனர்.

யாரோ சில அதிகாரிகள் செய்த தவறான தீர்மானம் காரணமாகவே தனுஷ்கோடித்துறை பெரும் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளதாம். தெய்வமே அந்த இடம் வேண்டாமென்று அதைஅழித்தபின்அங்கேயே போய் முட்டிக் கொள்வானேன்? மேலும் தனுஷ்கோடி என்பது ஸ்ரீ இராமர் இலங்கைமீது படையெடுக்க தமது வில்லை ஊன்றிய

## பிரேதபூமியாய்க் காட்சி தரும் குருநகர்த்துறை

# அழுதுகொண்டே பிறந்த மழலைகள் அசையாது துயிலும் சோகக் காட்சி

கல்பகோடி காலத்துக்கு முன்பிருந்தே ஆண்டாண்டுதோறும் இன்றுவரை அற்புதங்கள் நிகழ்ந்தவண்ணமே இருக்கின்றன. இறைவன் வாழ்வதற்கு இதுவும் ஒரு மகத்தான காரணமாயிருக்கிறது. ஆனால் 'அற்புதம், அற்புதமான அற்புதமாய் மட்டுமே இருந்து' விடுவதில்லை; இவ்வேளைகளில் அது 'பயங்கரமான' அற்புதமாகவல்லவா மாறிவிடுகிறது. அந்தப் 'பயங்கர'த்தை நிகழ்த்தித்தான் இறைவன் புகழ் தேடிக்கொள்ள வேண்டுமா என்ற ஐயம் எழும்போது தான் 'இறைத் தத்துவம்' மனிதனுக்குப் புதிராகும் நிலை எய்துகிறது. நேற்று முன்தினம் இரவு ஏழு மணியளவில் யாழ்ப்பாணத்திற்கும், பாலைதீவுக்கும் இடைப்பட்ட கடலில் நடந்ததும் நம்பிக்கைப் பீடத்திலே உருவானவைதாம்.

மழலை வேண்டுமென வேண்டுதல்செய்யும் மங்கையர்கள், --காதல் கைகூட வேண்டுமெனப் பிரார்த்திக்கும் இளமை உள்ளங்கள், --கணவரைத் தீய வழியினின்றும் திருப்பியருளும் எனும் மனைவியர், குழந்தைகளுக்கு எல்லா ஐசுவரியங்களையும் தருவாய் தேவா எனும் முதியவர்கள், கொடிது கொடிது எனப்பட்ட வறுமையை இன்னும் எமக்குத் தரலாமா? எனக் கேட்கும் ஏழை மனிதர்கள், அப்பப்பா! மனிதர்களி[illegible] துயரங்களெல்லாம் --உ[illegible]கின் துன்பங்களெல்லாம் ஒருசேர, ஒரே இடத்தில் --அந்தக் குருநகர் இறங்கு[illegible] விட்டன. [illegible] --[illegible]விக ஐயப்பாடுமின்றி [illegible] திருப்பீடத்தை நனைப்பார்கள். அது ஆண்டவனின் பீடத்தை குளிர்விக்கவல்ல; நிச்சயமாகத் தம்மையே குளிர்விக்கத்தான்.

இதயத்தின் பாரமெல்லாம் இறங்கிவிடும். துன்பமெல்லாம் துடைக்கப்பட்டுவிடும்: இறைவன் இரட்சிப்பான். பங்குனி போய்ச் சித்திரைவந்தால் பசுமை வாழ்வுவந்துவிடும். ஹா! இதயம்தான் எப்படி விம்மிப் பூரிக்கின்றது.

அடுத்த வருடத் திருவிழாவுக்கு என் மழலைச் செல்வத்துடன் உன்னைத் தரிசிக்க வருவேன் தேவா.

மங்கல கோலத்[illegible]ன் உன்னைப்பூஜிக்க இருவருமே வருவோம்.

திருந்திவிடும் கணவரை நிச்சயம் உன் பாதகமலத்திடம் அனுப்புவேன்

குழந்தைகளின் முத[illegible]ம் [illegible] க்கை!

இறைவா! நீ பெரியவன்! தேவதேவா! வெயிலாய், கடலாய், அலையாய், காற்றாய், வள்ளமாய் நீ உன் பக்தர்களை அணுகினாய். இனியாவது உன்சீற்றத்தைததணித்துக்கொள் ஆமாம்! நீயே மனிதராகிவிடு.

—மு.கனகராஜன்—

## த. சு. கழக வேட்பாளர்கள்

கொழும்பு, சனி

தமிழர் சுயாட்சிக் கழகத் தேர்தல் குழு கொழும்பில் கூடி, எதிர்வரும் பொதுத் தேர்தலில் பின்வரும் நால்வரையும் அபேட்சகர்களாகத் தெரிவுசெய்துள்ளது

ஏனைய தொகுதிகளின் அபேட்சகர் பட்டியல் வெகு விரைவில் வெளியிடப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் ஆரம்பித்துவைத்து ''நமது நாடு பொன்கொழிக்கும் நாடாக மிளிரும்காலம் வெகுதூரத்தில் இல்லை'' என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். இந்த நம்பிக்கைவீண்போகமுடியாது

மகாவலிகங்கையை வடக்கே திருப்பவேண்டுமென்று பலவருடங்களுக்கு முன்னர், அப்போது சட்டசபை உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற திரு. பாலசிங்கம் யோசனை கூறியபோது, ''அவருக்குப் பைத்தியம்'' என்று எள்ளி நகையாடியவர்களும் உண்டு. இந்தியாவில் பாக்ராநங்கல் அணைக்கட்டுத் திட்டமும் எகிப்தில் அஸ்வான் அணைக்கட்டுத் திட்டமும் மகாவலி கங்கையைத் திசைதிருப்புவதென்பது முடியாதவிஷயமல்லவென்ற கருத்தை வலுப்படுத்தியது.

தென்னிலங்கையில் அடிக்கடி பெருவெள்ளம் ஏற்படுவதையும் கங்கைநீர் கடலில் சென்று வீணுவதையும் தடுக்கும் அதேசமயம், வடமத்திய வடக்குமாகாணங்களான வரண்டபிரதேசங்களில் தரிசாகக் கிடக்கும் பெருந்தொகையான நிலத்தைப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தவும் கங்கையைத் திருப்பும் திட்டம் உதவவிருக்கிறது. கங்கை திரும்பிரதமர் நம்பிக்கை தெரிவிக்கிறார்

மகாவலிகங்கை திசை திரும்பினாலும் அதுவடக்கே வந்து சேருமா என்ற சந்தேகம் வடபகுதி மக்கள் மத்தியில் நிலவாமலில்லை. இந்த அவநம்பிக்கையை சில தினங்களுக்கு முன் ஆட்சிமன்றத்தில் சாவகச்சேரிப் பிரதிநிதி குறிப்பிட்டபோது ''கங்கைநீர் தொண்டமானாற்றுடன் சேரும்'' என்று ராஜாங்க அமைச்சர் பதிலளித்திருக்கிறார். வானம் பார்த்த பூமியான வடக்கில் வாழும் மக்கள் ஆழக்கிணறு தோண்டி, நீர்ப்பாய்ச்சி நாட்டின் உணவுத்தேவையை நிறைவேற்றத் தங்கள் உழைப்பைக் கொடுக்கும்போது, கங்கைநீர் வடக்கே வந்தால் வடபகுதி விவசாயிகள் எப்படி அதைப்பயன்படுத்துவார்கள் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

கங்கையைத் திருப்புவதற்கு உலகவங்கியிடம் இருந்து கடன்பெறுவதிலும் அந்தக் கடன்தொகையைச் சிக்கனமாகச் செலவிடுவதிலும் கவனம் செலுத்தும் அதேசமயம் கங்கைநீரைப் பயன்படுத்த உருவாக்கப்படும் குடியேற்றத்திட்டங்களிலும் முன்னர் செய்த தவறுகளைச் செய்யாது கவனமாக இருக்கவேண்டும்.

## தனுஷ்கோடி

தனுஷ்கோடிக்கும் இராமேஸ்வரத்துக்கும் ரயில் பாதையை மீண்டும் போடமுடியாதாம். கடல் அரிப்பினாலும், பொங்கும் அலைகளாலும் அப்பகுதியின் நிலையே மாறிவிட்டதென்று இந்திய ரயில்வே அமைச்சர் நந்தா, ராஜ்ய சபையில் அளித்துள்ள பதில் தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் கோரிக்கையை மறுப்பதாக இருக்கலாம். என்றாலும்இதுஇலங்கையைப் பொறுத்தவரை வரவேற்கத்தக்கதாகும்.

இலங்கையிலிருந்து தலைமன்னார் வழியாக இந்தியா செல்லுபவர்கள், தனுஷ்கோடியைக் கடல் அழித்தது முதல் இராமேஸ்வரம் வழியாகவே செல்லுகின்றனர். இந்தப் பாதை அவர்களுக்குப் பல விதங்களிலும் வசதியாக இருந்துவருகிறது. இந்தியாவில் இறங்கியதும் முதன்முதல் வெறும் மணற்காடான தனுஷ்கோஷ்டியைக் காண்பதற்கு பதில் புகழ்பெற்ற கோவிலிலுள்ள புனித இராமேஸ்வரத்தில் இறங்கி இரண்டொரு நாள் தங்கிச் செல்வதையே விரும்புவர். சென்ற 2 வருடங்களுக்கு மேல் இராமேஸ்வரம் துறை பயன்படுத்தப்படுகின்றது அங்கு கப்பல் வந்து நிற்பதற்கான இறங்குதுறை இன்னும் அமைக்கப்படாவிடினும், அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும் பணச் செலவில் தனுஷ்கோடி இறங்குதுறையைப் புதுப்பித்தபின், அங்கிருந்து பாம்பன்வரை பஸ்ஸுகளில் பிரயாணிகளையும் பொதிகளையும் ஏற்றிச்செல்வதென்று திட்டமிட்டுள்ளனர். பஸ் பாதைக்கும் அதிக செலவாகியுள்ளது. இலங்கையிலிருந்து செல்லும் பிரயாணிகள் தனுஷ்கோடியில் இறங்கி பஸ்ஸில் ஏறி பல மைல் நடந்து பாம்பனுக்கு வந்து ரயில் ஏறுவதற்கு எவ்வளவு சங்கடமென்பதை விளக்கத் தேவையில்லை. முன் யோசனையின்றி, தனுஷ்கோடித் துறையைப் புதுப்பித்தவர்களை பாராட்டமுடியாது.

எப்படியும் பிரயாணிகள் வசதியே முக்கியமானதாலும், தனுஷ்கோடிவரை ரயில் பாதையை முன்போல் நீடிக்கமுடியாததாலும், இராமேஸ்வரத்திலேயே கப்பல் இறங்குதுறையை அமைத்து அதைப் பலப்படுத்துவதே சிறந்ததாகும். இதற்கு இயற்கை வசதிகள் இராமேஸ்வரத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே தனுஷ்கோடி வழியே துணிச்சலுடன் கைவிட்டு, இந்திய அரசாங்கம் இலங்கையுடன் கலந்துபேசி, இராமேஸ்வரம் வழியையே பலப்படுத்தி, அங்கு பிரயாணிகளுக்குப் புதிய வசதிகளையும் அமைக்கச் சீக்கிரத்தில் வழிசெய்யும் என்றே ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

---

தான் 'இறைத் தத்துவம்' மனிதனுக்குப் புதிராகும் நிலை எய்துகிறது. நேற்று முன்தினம் இரவு ஏழு மணியளவில் யாழ்ப்பாணத்திற்கும், பாலைதீவுக்கும் இடைப்பட்ட கடலில் நடந்ததும் அப்படியானதுதான்.

இறைவன் பாலைதீவுக்குத் தன் பக்தர்களை அழைத்துவிட்டான். வெயிலாக மாறி அவர்களைப் பொசுக்கிச் சோதிக்கிறான். அவர்கள் கலங்கவில்லை. அலைகளாக மாறி நீரை வாரி இறைக்கிறான், காற்றாக மாறி அவர்களை ஆசுவாசப்படுத்துகிறான்.

''பாலைதீவு அந்தோனியாரே, --எமது பாவங்களைப் போறுத்தருளும். தேவனே --எமது துன்பங்களைப் போக்கியருளும். இறைவா --எம்மை இரட்சித்தருளும்'' —இப்படியெல்லாம் வேண்டிக்கொண்டு துயரங்களையெல்லாம் தம் இதயங்களிலே தேக்கியவண்ணம் அதோ அவர்கள் அவற்றை அவரின் பாதங்களிலே இறக்கிவிட ஆயத்தமாகிவிட்டார்கள். எத்தனை நம்பிக்கைகள்! எத்தனை அபிலாஷைகள்! எத்தனை ஆசைகள்! எத்தனை எதிர்காலத் திட்டங்கள்! எல்லாம் எம்மை ஏற்றிவைக்கப் போகும் இறைவன் என்ற ... துயரங்களெல்லாம் --உலகின் துன்பங்களெல்லாம் ஒருசேர, ஒரே இடத்தில் --அந்தக் குருநகர் இறங்குதுறையில்சங்கமித்துவிட்டன. பாரபட்சமின்றி --எ... விக ஐயப்பாடுமின்றி --அருகிலே சிலர் இருக்கின்றார்களே என்ற எண்ணமுமற்று இன்றைய மனித லட்சணத்திற்கு மாறாக அவர்கள் எப்படித்தான் அந்தத் துறை மேடையில் கொட்டிக் குவித்துவிடுகின்றார்கள்?

இறைவனும் மனிதர்களும் கலக்கும் சங்கமத்துறை அது என்பதனாலா? இறைவா, நீதான் எப்படி நம்பிக்கைக்குப் பாத்திரவானாகிவிட்டாய்? நம்பிக்கைதானே நம்மை நாளையும் வாழச்செய்கிறது. இறைவா, நீ பெரியவன்தான்.

அதோ இறையைத்தொடும் இனிய உள்ளங்கள், அதோ வள்ளம்—

வள்ளம் கூட இறைவனின் உருவமா?— வள்ளம் நிறைகிறது. பக்தர்கள அதில் நிறைந்து வழிகின்றனர். அவர்கள கண்காணாத தேசத்திற்குப் போகவில்லை. என்றாலும் சட்டி, பானை, உணவு தண்ணீர், மூட்டை முடிச்சுகளுடன் வளளத்தை (இறைவனையா?) நம்பிக் கடலில் இறந்துவிட்டார்கள. புல் பூண்டுகளற்ற, வாடடும் வெயிலைத்தவிர்ந்த வேறு உருக்கொளள முடியாமல் அந்தச் சின்னச்சிறு தீவில் கோவில் கொண்டுவிடட ஆண்டவனை அரவணைத்துக் கொளளப் புறப்படடுவிடடனர்.

கிறிஸ்தவர்கள — இந்துக்கள — இஸ்லாமியர் எல்லாலாம் ஒருசேர பாலைதீவுத் தெய்வத்தை தரிசிப்பது ஆண்டாண்டுகளாக நடக்கும் ஒரு திருவிழாதான்.

இறைவன் அவர்களைத் தன்னிடம், தன் முதுகில் தானே ஏந்திச்செல்வதைப் போல அந்த வள்ளம் விண்ணை நோக்கித் தவழ்வதைப்போல ஆழியில் மிதக்கிறது. ஓ! இறைவன் எங்கே இருக்கிறான்? விண்ணிலா ஆழியின் அடியிலா?

பாலைதீவு அவர்களை ஏற்றுக்கொள்ளும். ஏற்கனவே போனவர்கள் கடவுளிடம் வந்தவர்களைக கரம் நீடடி வரவேற்பார்கள். எல்லாம் வல்லவரின் திருநாமம் விண்ணிற் கலக்கும்.

பகலவன் தன் வெககை யால் பிழிவதைப் பொருடபடுத்தாமல் அவர்களோ தம் வேதனை மயமான இதயத்தின் வேண்டுதல்களைப் பிழிந்து அககோவிலின் மங்கல கோலத்து... உன்னைப்பூஜிக்க இருவருமே வருவோம்.

திருந்திவிடும் கணவரை நிச்சயம் உன் பாதகமலத்திடம் அனுப்புவேன்

குழந்தைகளின் முத... பளத்தையெல்ல... உனக்கே காணிககையாக்குவேன்.

உன்னைத்தொழும் நேரத்துக்கு இனி வறுமையேஉண்டாகாது — இப்படியெல்லாம் எத்தனை காட்சிகள்; எத்தனை கற்பனைகள்.

ஆனால்...

இரவு 7மணி சப்த சமுத்திரம்என்பதைப்போல 7ல் அது துடிக்கும்போது அந்த வள்ளம் தத்தளிக்கிறது அந்தோ...

துடிதுடிக்க கூககுரலிட ஓலம்பெருக - ஒப்பாரி எழும்ப உயிர்க கூட்டமொன்றுகடலின் பிளந்த அலைகளுக்குள் அகப்பட்டு அழிகின்றது. கொடிதினும்கொடிது! இறைவா நீ கடலா நீ இரவா? நீ வளளமா? நீதான் மனிதனா

இப்போது...

விடிந்து விட்டது. குருநகர்த் துறையில் அலைபோலும் மக்கள கூட்டம்

தன்ஒரேஒரு வாலிப மகனை பிணமாகககண்டு ஓலமிடும் வயோதிபத் தாய்... தன் பச்சிளம் பேர்த்தியைக காவு கொடுத்து விட்ட மாது... காதலனைப் பறிகொடுத்த காதலி நண்பர்களை இனம் காணவே முடியாத நண்பர்கள.

பிரேதங்களை பொலிஸ் வாகனம் சுமந்து போகிறது. 5 பிரேதங்கள் வள்ளத்தில் கிடக்கின்றன. இளம் பெண்... வாலிபர்கள்... குழந்தைகள்... இதற்குமேலாக வெயில்!— ஏ இறைவா இன்னமும் ஏன் வறுக்கிறாய்! சீற்றம் தணிந்திலையோ.

இன்னமும் பிரேதங்கள் கிடைக்கவில்லையாம்! காரைநகர்க் கரையில் சில ஒதுங்கினவாம். இன்னும் பல ஒதுங்குமென எதிர்பார்க்கிறார்களாம்.

அப்பப்பா —கடந்த காலத்தில் தான் கோவில்களில் எத்தனை விபத்துகள். கதிர்காமத்தில் தீ விபத்து! கண்டி பெரகராவில் கலகம்! கச்சதீவில் சாவு! மடுக்கோவிலில் மரணம்.

ஏன்? ஏன்?

இறைவா நீ எம்மை இரட்சிப்பவனல்லவா? —

அதோ! இத்தனையும் நடந்த பின்னும் குருநகர்த்துறையில் பக்தர் கூட்டம்! அவர்கள் பாலைதீவுக்குப் போகத்தான் கூடியிருக்கின்றார்கள். ஆ! என்னே நம்பி

## தப்பியவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து சடலங்கள் பொதுமக்களின் உதவியுடன் மீட்கப்பட்டன.

மீட்புவேலையில்மாலைதீவில் முகாமிட்டிருக்கும் யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஏ. சொலமன், திரு. தர்மு ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். இரணைதீவு கிராம சேவையாளர் திரு. சபாரத்தினம் மீட்பு வேலைகளுக்கான உதவிகளைச் செய்துவந்தார்.

(தே. நி.)

---

... கூடி, எதிர்வரும் பொதுத் தேர்தலில் பின்வரும் நால்வரையும் அபேட்சகர்களாகத் தெரிவுசெய்துள்ளது

ஏனைய தொகுதிகளின் அபேட்சகர் பட்டியல் வெகுவிரைவில் வெளியிடப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது

ஊர்காவற்றுறை: திரு.வ நவரத்தினம் (எம். பி.), கோப்பாய்: திரு. முசி கனக சுந்தரம்[உடும்பிராய் கி, ச. அங்கத்தவர்], நல்லூர்: முன்னாள் அரசாங்க அதிபர் திரு அம்பலவாணர் இரத்தினம், பருத்தித்துறை: திரு. பொ. கனகராசா

ஏனைய தொகுதிகளிலும் போட்டியிடப் பலர் விண்ணப்பித்திருப்பதாகவும். அவை இப்பொழுது பரிசீலிக்கப்படுவதாகவும் தமிழர் சுயாடசிக்க கழகப் பிரமுகர் தெரிவித்தார்

## அடையாளம...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தினம் அந்தோனிப்பிள்ளை (வயது 6), செல்வரத்தினம் மனைவி பிலோமினு (27), செல்வரத்தினம் விஜயன் (10), ஜோசப் அன்ரனி ஜேசுதாசன் (21), வைத்திலிங்கம் துரைராசா (29), தம்பிப்பிள்ளை சிவப்பிரகாசம் (25), தேவதாசன் தேவசகாயம் (17), அன்னை செல்வம் மகேந்திரன் (19) சபாரத்தினம் தெட்சணுமூர்த்தி (20), செல்லையா இராதாகிருஷ்ணன் (17) வேலனை, ஆறுமுகம் வெற்றிவேல் (45), பொன்னுத்துரை என்றழைக்கப்படும் ஜோசப் எதிரிசிங்கம் (45), அந்தோனிப்பிள்ளை விஜயன் (35) கோயில் வீதி, யாழ்ப்பாணம், மாரிமுத்துசெட்டி இளைய பெருமாள் (18).

நேற்றிரவு 10 மணிவரை 42 பேர் அடையாளம்காணபட்டு சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. இன்னும் மூவரின் சடலங்கள யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அடையாளம் காணப்படாமல் வைக்கப்பட்டுள்ளன. 50 வயது மதிக்கத்தக்க ஒருவரும் இரண்டு சிறுவர்களுமே இதுவரை அடையாளம் காணப்படாதவர்களாவர். சடலங்கள் பிரேத பரிசோதனையின்றி உறவினர்களிடம் கொடுக்கப்பட்டன.

— —

## மகா சிவராத்திரி

கொ ... சனி

மகா சிவராத்திரி ... கா திர்காமக்ஷேத்திரத்தி மார்ச்மாதம் 6-ந்திகதிவெள்ளிக்கிழமை, சிறப்பாகக் கொண்டாடப்படும்.

---

முன் இங்கேயும் சென்று வழிபட்டார் என்பது ஐதீகம்.

தலைமன்னார் மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்திலே தான் சட்டவிரோதக் குடியேற்றக்காரரின் தடை முகாம் உள்ளது. வாரக் கணக்காக, மாதக் கணக்காக அங்கு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்கள் விரும்பினால், பக்கத்திலுள்ள இக்கோயிலில் வந்து வழிபட்டு மன ஆறுதல் பெற ஒழுங்கு செய்ய முடியாதா? எந்தப் புண்ணியவான் இதற்கு முயற்சி எடுப்பரோ?

அக்கோயில் திருப்பணி சபைத் தலைவரும் இளம் சைவவீரருமான டாக்டர் கணபதிப்பிள்ளை, இக்கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டியிருப்பதாயும் இதற்குச் சில ஆயிரம் ரூபாய் தேவையென்றும் தெரிவித்தார். மக்களுக்கும் சிறப்பாக இலங்கை—இந்திய ... இடம் வேண்டாமென்று அதைஅழித்தபின்அங்கேயே போய் முட்டிக் கொள்வானேன்? மேலும் தனுஷ்கோடி என்பது ஸ்ரீ இராமர் இலங்கைமீது படையெடுக்க தமது வில்லை ஊன்றிய இடமாகும். இராமேச்சரமோ, இலங்கையில் போரினால் அழிவு செய்தமைக்காக வருந்தி அந்த பாவ விமோசனத்துக்காக சிவலிங்கத்தை ஸ்தாபித்து அவர் வழிபட்ட இடம். ஆகவே இரு நடுகளையும் இணைக்க தனுஷ்கோடியைவிட, பின்னரே மிகச் சிறந்ததாகுமல்லவா!

0 0 0

வாக்கினால் இன்புரைத்து வாழ்கிலார் தம்மையெல்லாம், போக்கினாற் புடைத்தவர்கள் உயிர்தனை யுண்டு மாறான், தேக்குநீர் செய்த கோயில் திருவிராமேச்சுரத்தை, நோக்கினால் வணங்குவார்கள் நோய்வினை நுணுகுமாறே.

— அப்பர் அடிகள்

## மேயரும் எம். பி.க்களும்

நேற்று முன்தினம் நண்பகல் பாலைதீவுக்குச் சென்ற யாழ்ப்பாண நகர மேயர் திரு தா ச துரைராசாவும் மற்றும் சில அங்கத்தவர்களும் அங்குள்ள யாத்திரிகர்களின் நலனையும், விபத்தில் சிக்கி உயிர் தப்பி வந்தவர்களுக்கு முதல் உதவி அளிக்கும் வேலைகளையும் கவனித்தனர். யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினரும் முன்னாள் எம் பி யுமான திரு அல்பிரட்துரையப்பாவும் யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு எம் எஸ். பேரின்பநாயகமும் இன்று காலை பாலைதீவுக்குச் சென்றனர். சாவகச்சேரி எம் பி. திரு வி என் நவரத்தினம், கோப்பாய் எம் பி திரு சி. கதிரவேலுப்பிள்ளை, மட்டக்களப்பு முதலாவது எம் பி. திரு செ இராசதுரை, கிளிநொச்சி எம் பி திரு கா. பொ இரத்தினம், செனட்டர் எஸ் நடராசா ஆகியோர் யாழ்ப்பாணம் இறங்குதுறைக்கும், காரைநகருக்கும் சென்று அங்கு கவலையுடன் திரண்டு நின்றவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன் நீரில் அமிழ்ந்து மாண்டவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் ஈடுபட்டனர்

விபத்தில் மாண்டவர்களை மீட்பதற்கு உடனடியாகக் கடற்படை படகுகளையும் ஹெலிகப்டர்களைரிம் கொடுத்துதவுமாறு கடற்படைத் தளபதி, விமானப் படைத் தளபதி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளை யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு ஜி ஜி பொன்னம்பலம், திரு ஸி எக்ஸ். மார்ட்டின் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்

## மீட்பு வேலைகளில் கடற்படை

வள்ளம் கவிழ்ந்து அதில் பிரயாணம் செய்த பலர் நீரில் மூழ்கி மாண்டுவிட்டதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து பலரும் செய்த முயற்சியின் பயனாக காரைநகரிலுள்ள கடற்படையினரின் படகுகள் மீட்புவேலைகளுக்கு உபயோகப் படுத்தப்பட்டன. கடற்படையைச் சேர்ந்த நான்கு படகுகள் மீட்புவேலைகளில் ஈடுபட்டன. படகு விபத்து பற்றித் தகவல் கிடைத்ததும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு பிரான்ஸிஸ் பீட்டர்ஸ், வடபகுதிப் பொலிஸ் அதிபா திரு. சுந்தரலிங்கம் மற்றும் அதிகாரிகளும் யாழ்ப்பாணம் இறங்குதுறைக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்துவிட்டு காரைநகருக்குச் சென்று கடற்படைப்பிரிவுத் தலைவரைச் சந்தித்து அங்குள்ள படகுகளை கடலில் அமிழ்ந்தவர்களை மீட்பதற்குப் பயன்படுத்த ஏறபாடுசெய்தனர்.

அரசாங்க அதிபர், வடபகுதிப் பொலிஸ் அதிபர் ஆகியோர் பாலைதீவுக்கும் சென்று பார்வையிட்டனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org